விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 299 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 27 சனிக்கிழமை (14.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## காங்கேசன்துறை - நாகபட்டினம் பயணிகள் கப்பல் சேவை

### உத்தியோகபூர்வமாக இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று ஆரம்பமாகவுள்ளது.**

இரு நாடுகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய, பயணிகள் கப்பல் சேவை முன்னெடுக்கப்படுமென அமைச்சின் செயலாளர் K.D.S.ருவன்சந்திர தெரிவித்தார்.

செரியாபாணி (Cheriyapani) எனும் பயணிகள் கப்பல் 100 பயணிகளுடன் நாகபட்டினத்தில் இருந்து 15



## கிளிநொச்சியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத் 15

## ரயிலில் ஏறமுற்பட்டபோது தவறிவிழுந்தவர் மரணம்

### தச்சன்தோப்பில் சம்பவம்

(கரணவாய்)

புகையிரதத்தில் ஏற முற்பட்டபோது தவறி தண்ட வாளத்தில் வீழ்ந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரி 15

## குப்பைக்கு தீ வைத்த குடும்பப் பெண் பலி

### சாவகச்சேரியில் துயரம்

(கரணவாய்)

மண்ணெண்ணெய் ஊற்றி குப்பைக்குத்தீவைத்த போது உடலில் தீ 15

### கொற்றாவத்தையில்

## கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொற்றாவத்தை பகுதியில் 28 கிராம் 100 மில்லிக்கிராம் கஞ்சாவுடன் 27 வயதுடைய சந்தேக 15

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாளை

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாளை 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார். (ம-7)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

### ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் கவனம்

(ஜெனிவா)

**இலங்கை அரசாங்கம் பரிசிலித்துவரும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், நிகழ்நிலை காப்பு சட்டமூலங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது.**



(16ஆம் பக்கம் பார்க்க)

## வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வங்களாவிரிகுடாவில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் வடக்கில் எதிர்வரும் நாட்களில் மழைக்கு வாய்ப்புள்ளது.

தற்போது வங்காள விரிகுடாவிலும் அரபிக் கடலிலும் இரண்டு காற்றுச் சுழற்சிகள் உருவாகியுள்ளன.

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள காற்றுச் சுழற்சியானது எதிர்வரும் 16.10.2023 திகதியளவில் தாழமுக்கமாக உருவாகும் 16

## துன்னாலையில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(கரணவாய்)

துன்னாலை கிழக்குப்பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் 15

## புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு!

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ள நிலையில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தங்களுக்கான பரீட்சை நிலையத்துக்கு செல்வதில் ஏதேனும் அசௌகரியம் காணப்படுமாயின் அருகில் உள்ள வேறு பரீட்சை நிலையத்துக்கு சென்று பரீட்சைக்கு தோற்ற முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார். 15

## வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பில் கலந்துரையாடல்

### கட்சித் தலைவர்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 20ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை நடைபெற்றது.

நேற்று மாலை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் இல்லத்தில் இக்கலந்துரையாடல் 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Jaffna
## Kandiah Karthigaesan Tamil Library Trust Fund Preservation and Digitization of Sri Lankan Tamilology Collection

University of Jaffna, Sri Lanka will entertain applications for the **"Project Assistant"** full-time contract basis under the project titled **"Preservation and Digitization of Sri Lankan Tamilology Collection"** from suitable qualified persons.

**Required Qualifications and Experience**

1. Should have passed the G.C.E (O/L) examination in six subjects (not more than two sittings) with two credit passes including Tamil language and mathematics and Ordinary pass in English language.

**AND**

2. Should have passed the G.C. E. A/L examination with three passes.

**AND**

3. Should have obtained a certificate of proficiency in NVQ level 5 or above issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Library Science, Social Science, Arts and Humanities, Siddha Medicine and Applied Science.

* Preference will be given for those have obtained a certificate of proficiency not below the NVQ level 4 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or a recognized Institution in the field of Information Communication and Multimedia Technology/ Information and Communication Technology/ Information Technology/ Database Management System/ Graphic design

**Salary:** LKR 30,000.00 per month. In addition, EPF 12% and ETF 3% will be paid.

***Age Limit:*** Not more than 35 years on the closing date of application.

**HOW TO APPLY:**

Candidates who are interested should submit their applications in the prescribed format available on the University website – www.jfn.ac.lk to the Librarian, Library, University of Jaffna, Ramanathan Road, Thirunelvely, Jaffna by registered post with certified photocopies of the relevant certificates on or before **31.10.2023** for further details of Terms of Reference (TOR) please visit the website (www.jfn.ac.lk)

**Registrar**
**University of Jaffna**
**13.10.202**

(C-7422)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 - 06 - 1955 | 11 - 10 - 2023 |

## மகேசன் நவபாக்கியம்

அம்பன் குடத்தனையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மகேசன் நவபாக்கியம் அவர்கள் (11.10.2023) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகேசன்(ஓய்வுபெற்ற சாரதி - கைதடி முதியோர் இல்லம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் அன்னபாக்கியம், பொன்னம்பலம்(லண்டன்) மற்றும் பவா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் கெங்கா(லண்டன்), பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரஞ்சினி, சாந்தினி (டென்மார்க்), இராகினி(ஆசிரியை-யா/தாளையடி றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் லக்குமணன்(DO -பிரதேச செயலகம் மருதங்கேணி), அகலிகா(DO -பிரதேச செயலகம் மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் அஸ்வின்(லண்டன்), கவின் (லண்டன்), கஜானி(லண்டன்), பற்பநாதன்(டென்மார்க்), இரஜனிகாந்த், ஷாலினி(MSO -பிரதேச செயலகம் கரவெட்டி), சூரியமூர்த்தி(சாரதி- வட மாகாண கல்வித் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜவாஹர் (டென்மார்க்), திவ்யா(டென்மார்க்), அபிஷா, அனுஸ்ரிகா, லவன்ஷன், நிலான்ஷன், ஆருக்ஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 6.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 160 5069**
**077 736 1912**

தகவல்: குடும்பத்தினர்

(C-7424)



யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள பட்டிமன்ற பேச்சாளர் சொல்வேந்தர் சுகிசிவம் அவர்களை யாழ்ப்பாணம் மனவளக் கலைமன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் தலைவர் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் பலாலி விமான நிலையத்தில் வரவேற்ற போது. (ம)

## கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி பொன்.செல்வராசா காலமானார்



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சிரேஷ்ட தலைவருமான பொன். செல்வராசா நேற்று காலமானார். (ம-7)

## மேம்பாட்டு கருத்தரங்கு

அன்பு உலகம் அறக்கட்டளை ஏற்பாட்டில் நடைபெறும் சமூக பொருளாதார கல்வி மேம்பாட்டுக் கருத்தரங்கானது இன்று காலை 9.30 மணியளவில் மு/மத வளசிங்கன்குளம் கிராம ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பிரம்மஸ்ரீ க.இலட்சுமண சர்மா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கனக தவராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ம-7)

## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

**(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)**

(C-7420)

**021 222 1265,076 250 0098**

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் **2023.11.01** ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கு **இருவரை** நியமிக்கும் வகையில் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நியந்தனைகள்**

1. முழுநேரமாக யாழ் மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப் படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 125,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 27.10.2023 மு.ப 10.00**

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**

(C-7421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுந்தூர பார்வை குறைபாட்டால் பாதிக்கப்படும் மாணவர்கள்

**(கொழும்பு)**
**பாடசாலை மாணவர்களில் 15 சதவீதமானவர்கள் குறுந்தூர பார்வை குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.**

மாணவர்கள் வீட்டில் தொலைக்காட்சியை அல்லது பாடசாலையில் கரும்பலகையைப் பார்க்கும் போது, தமது கண்களை சுருக்கி பார்வையிடுவார்களாயின் அவர்கள் தொடர்பில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவதானம் செலுத்த வேண்டும் என வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனை பரிசோதனை மூலமே, கண்டறிய முடியும். எனவே, குறித்த மாணவர்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் நாட்டில் வேகமாகப் பரவும் கண்நோய் தொடர்பில் பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என அவர் குறிப்பிட்டார். (நி-5)

## சுற்றாடல் அமைச்சர் பதவி ரணிலின் வசம்

(கொழும்பு)
சுற்றாடல் அமைச்சர் பதவி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானி தற்போது வெளியிடப்பட்டுள்ளது. (நி-5)

## 2,518 தாதியர்களுக்கு நியமனம்

(கொழும்பு)
2018 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சியாளர்களாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 2,518 பேருக்கு நியமனத்தை வழங்குவதற்கு திறைசேரி இணக்கம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் தொழிற்சங்கங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக முதற்கட்டமாக 1,000 தாதியர் பயிற்சியாளர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு முன்னதாக யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினர் முன்வைத்த கோரிக்கையை அடுத்து, சகல தாதியர் பயிற்சியாளர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## அனைத்து விதமான வாகன இறக்குமதிகளுக்கும் பச்சைக்கொடி காட்டிய இலங்கை

(கொழும்பு)
அனைத்து வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அத்துடன் குறித்த கொள்கைகள் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட பின்னர் வாகன இறக்குமதி தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-5)

## 5 ஆயிரம் கண்வில்லைகள்; இலங்கைக்கு வழங்கிய பிரித்தானியா

(கொழும்பு)
ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள 5000 கண் வில்லைகள் பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கண் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சிந்தக படவல தெரிவித்தார்.

நேற்று முன்தினம் உலக பார்வை தினத்தை முன்னிட்டு தேசிய கண் வைத்தியசாலையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், சராசரியாக மாதமொன்றுக்கு சுமார் 900 கண்வில்லை சத்திரசிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் பிரித்தானியாவிடம் இருந்து கிடைத்த வில்லைகள் பேருதவியாக இருக்கும் என்றும் கண்வில்லை தட்டுப்பாட்டினால் சத்திரசிகிச்சை இனி தடைபடாது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## மீண்டும் மகாபொல கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி



(கொழும்பு)
நீண்டகாலத்தின் பின்னர், மகாபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியை எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியானது, டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையில் ஜா-எல மாநகரசபை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வருடமொன்றுக்கு 64 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி கற்கும் சுமார் ஆயிரத்து 500 மாணவர்களுக்கும் மகாபொல நம்பிக்கை நிதியத்தின் ஊடாக கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

மகாபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியை வெற்றியடையச் செய்வதற்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு வழங்கினால் மகாபொல உதவித் தொகையை அதிகரிக்க முடியும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## நீரிழிவு மற்றும் புற்றுநோய்களுக்கான மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)
நீரிழிவு மற்றும் புற்றுநோய்களுக்கு வழங்கப்படும் இரண்டு முக்கிய மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு மற்றும் புற்றுநோய் உள்ள நோயாளர்களுக்கான மருந்துகளில் தட்டுப்பாடு நிலவுகிறது.

இது எமது நாட்டின் சுகாதார துறையை மேலும் வீழ்ச்சி பாதைக்கு இட்டுச் செல்கிறது. குறித்த இரண்டு அத்தியாவசிய மருந்துகளை தற்போதைய அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க தவறியுள்ளது.

இவ்வாறு அத்தியாவசிய மருந்துகளை வழங்க தவறியுள்ள அரசாங்கம், தரம் குறைந்த மருந்துகளை கொள்வனவு செய்து மருந்து மாஃபியா ஊடாக மக்களை தவறாக வழிநடத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, நாட்டில் மருந்து விநியோகம் தொடர்பில், பாரிய நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல முன்பதிவுகளையும் இடைநிறுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் குறித்த முன்பதிவுகளை இரத்துத் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## இரண்டு கிரகணங்கள் இம்மாதத்தில் நிகழும்

(கொழும்பு)
இம்மாதம் இரண்டு கிரகணங்கள் நிகழவுள்ளன. அதில் சூரிய கிரகணம் இலங்கைக்கு தென்படாத நிலையில், சந்திர கிரகணம் மட்டும் தென்படும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியலாளரும் விண்வெளி விஞ்ஞான பிரிவின் பணிப்பாளருமான பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி, இன்று நெருப்பு வளைய சூரிய கிரகணமும் எதிர்வரும் 28 ஆம் திகதி இரவில் பகுதி சந்திர கிரகணம் நிகழவுள்ளன.

இந்த நெருப்பு வளைய கிரகணம் அமெரிக்காவில் நன்றாக தெரியும். மெக்சிக்கோ, மத்திய அமெரிக்கா, கொலம்பியா மற்றும் பிரேசில் பகுதிகளிலும் தென்படும்.

சூரிய கிரகணம் இலங்கையில் தென்படாது. இலங்கை நேரப்படி இந்த சூரிய கிரகணம் அமெரிக்காவில் இன்று இரவு 8.34 மணிக்கு ஆரம்பமாகி பிரேசில் அருகே ஒக்டோபர் 15 ஆம் திகதி அதிகாலை 2.25 மணிக்கு முடிவடைகிறது. வழக்கமாக, இரண்டு வார இடைவெளியில் தொடர்ச்சியாக இரண்டு கிரகணங்கள் நிகழும் என தெரிவித்தார்.

அதன்படி, 14 நாட்களுக்குப் பிறகு, ஒக்டோபர் 28 ஆம் திகதி இரவு 11.32 மணி முதல் பகுதி சந்திர கிரகணம் நிகழும். ஒக்டோபர் 28 ஆம் திகதி மற்றும் ஒக்டோபர் 29 ஆம் திகதி அதிகாலை 3.56 மணிக்கு முடிவடைகிறது.

இந்த சந்திர கிரகணம் ஐரோப்பா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, வடஅமெரிக்கா, தென்அமெரிக்காவின் பெரும்பாலான பகுதி, பசுபிக், அத்திலாந்திக், இந்தியப் பெருங்கடல், ஆர்க்டிக் மற்றும் அந்தாட்டிக்கா ஆகிய நாடுகளில் தென்படும்.

இந்த கிரகணத்தின் பகுதி நிலை இலங்கைக்கு ஒக்டோபர் 29 ஆம் திகதி அதிகாலை 1.05 மணி முதல் 2.23 மணி வரை தென்படும். முழு கிரகணம் அதிகாலை 1.44 மணிக்கு இருக்கும் என தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பங்களாதேஷை வீழ்த்தி நியூஸிலாந்து அபார வெற்றி

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் நேற்றைய போட்டியில் நியூஸிலாந்து அணி 08 விக் கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர் மானித்தது.





இதற்கமைய, முதலில் துடுப் பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களை பெற் றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக, முஷ்பிகுர் ரஹீம் 66 ஓட்டங் களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், நியூஸிலாந்து அணியின் லொக்கி பெர்குசன் 49 ஓட்டங்களுக்கு 03 விக் கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 246 ஓட் டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூ ஸிலாந்து அணி 42.5 ஓவர்கள் நிறைவில் 02 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக, டேரில் மிட்செல் 89 ஓட்டங் களையும், கேன் வில்லியம்சன் 78 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில், பங்களாதேஷ் அணியின் முஸ்தபிசுர் ரஹ்மான் 36 ஓட்டங்களுக்கு ஒரு விக் கெட்டை கைப்பற்றினார். (ம-7)

## ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் சேர்ப்பு

ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக் கெட்டை சேர்க்க வேண்டும் என்ற பரிந்துரையை சர்வதேச ஒலிம்பிக் பேரவை ஏற்றுக்கொ ண்டுள்ளது.

2028 ஆம் ஆண்டு அமெ ரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கிரிக்கெட்டை இணைத்துக்கொள் வதற்கான பரிந்துரை மும்பை யில் இடம்பெற்ற சர்வதேச ஒலிம் பிக் பேரவையின் செயற்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இதன்போதே இந்த பரிந் துரையை சர்வதேச ஒலிம்பிக் பேரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

இதனையடுத்து மும்பையில் இம்மாதம் 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை இடம்பெறவு ள்ள சர்வதேச ஒலிம்பிக் பேரவை அமர்வில் குறித்த பரிந்துரை வாக்கெடுப்பிற்கு விடப்படும்.

ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளிலும் ஆறு அணி கள் பங்கேற்கும் வகையில் கிரிக் கெட் போட்டிகளை நடத்தலாம் என்று ஐசிசி, லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் குழுவிடம் பரிந்துரை செய்திருந்தது.

அவ்வகையில், ஐசிசி டி20 போட்டித் தரவரிசையில் முதல் ஆறு இடங்களைப்பிடிக்கும்அணிகள்ஒலி ம்பிக்போட்டியில்பங்கேற்க முடியும்.

இதேவேளை,1900 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக்கில் இறுதியாக கிரிக்கெட் விளையா டப்பட்டது. அப்போட்டியில், பிரித்தானியாவை பிரான்ஸ் தோற்கடித்து, தங்கம் வென்றது.

இரண்டுநாள் இடம்பெற்ற இந்த போட்டியில் நான்கு இன் னிங்ஸ்கள் விளையாடப்பட்ட மையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)




## குமார் தர்மசேனவை கைது செய்ய உத்தரவு



இலங்கையின் முன்னாள் நட்சத்திர கிரிக்கெட் வீரரும், தற்போதைய சர்வதேச கிரிக்கெட் நடுவருமான குமார் தர்ம சேனவை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித் துள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளது.நாரஹென்பிட்டி பொலிஸாருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாரஹென்பிட்டி பிரதேசத்தில் தனியாருக்கு சொந்தமான வீடு ஒன்றுக்குள் பிரவேசித்து வீட்டில் வசிப்பவரை ஆயுதங்கள் கொண்டு மிரட்டியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குமார் தர்மசேன நிறுவனம் ஒன்றின் தலைவராக [illegible] யாற்றி வருகிறார் என்பது குறிப் பிடத்தக்கது.

தர்மசேன, அவரது மனைவி மற்றும் குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட 12 பேரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவ பணிப்பாளரி னால் நீதிமன்றில் தாக்கல் செய யப்பட்ட மனுவின் பிரகாரம் தர்ம சேன உள்ளிட்டவர்களை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தர விட்டதாக தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குமார் தர்மசேன .தற்போது உலகக் கிண்ண போட்டி கட மைகளில் ஈடுபட்டுள்ளார் என் பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 3 | 3 | 0 | 6 |
| 2 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 4 |
| 3 | இந்தியா | 2 | 2 | 0 | 4 |
| 4 | பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 4 |
| 5 | இங்கிலாந்து | 2 | 1 | 1 | 2 |
| 6 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 2 |
| 7 | இலங்கை | 2 | 0 | 2 | 0 |
| 8 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 |
| 9 | அவுஸ்திரேலியா | 2 | 0 | 2 | 0 |
| 10 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநல தினத்தினை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வு நாடகம்



(குருமன்காடு)

உளநல தினத்தினை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வு நாடகம் ஒன்று மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அரங்காலயா கலைக்கூடம் கலைஞர்களினால் உளநலன் தொடர்பான இவ்விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது. வவுனியா பிரதேச செயலகமும் மாவட்ட பொதுமருத்துவமனை உளநல பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் உளநல மருத்துவர் சுதாகரன், மருத்துவர் திருமதி .வைதேகி திலீபன், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சுகாசினி சிவதர்சன், உளநலத்துறை உத்தியோகத்தர் திருமதி. துஷாந்தன் பிரியதர்சினி, பாடசாலையின் அதிபர் நா.இந்திரகுமார், ஈச்சங்குளம் கிராம சேவகர் ஜே. அமலதாஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6-250)

## யாழ்.மாவட்டத்தில்

# 14 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை உடைமையில் வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 9 மாத கால பகுதிகளில் 13 தடவைகள் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கைகளின் போது உணவகங்கள், விற்பனை நிலையங்கள் என 205 வர்த்தக நிலையங்களில் சோதனையிட்டுள்ளோம்.

அவற்றில் 14 உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளதோடு அந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன.

எதிர்வரும் காலங்களிலும் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

எனவே வர்த்தகர்கள் தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றை விற்பனை செய்யவோ , பயன்படுத்தவோ மற்றும் உடைமையில் வைத்திருந்தால் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (நி-5-6-33)

## 5 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம் 1961.06.03 மறைவு 2018.10.09

அமரர். பொன்னையா குமாரகுலசிங்கம்

(திதி:-புரட்டாதி அமாவாசை)

ஆற்றுப்படுத்தி வழிகாட்டினீர்
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறாது உம் பிரிவுத்துயர்
ஆண்டவனடியில் ஆறுதலடைய
ஆத்மார்த்தமாய் பிரார்த்திக்கின்றோம்.

தெய்வங்கேணி வீதி,
சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (C-7418) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு சிரார்த்ததின நினைவஞ்சலி



மண்ணில் 08.10.1942

விண்ணில் 06.10.2021

அமரர். செல்வராசா கனகம்மா

(குஞ்சம்மா)

சிரார்த்த திதி : புரட்டாதி அமாவாசை 14.10.2023

காலமெல்லாம் துணை என நான் இருக்க
காலனவன் உன் உயிர் கவர்ந்ததென்ன
உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி. (C-7418) அன்பான கணவன் மற்றும் பாசமுள்ள உறவுகள்.

# இராசிபலன்

14.10.2023
புரட்டாதி 27, சனிக்கிழமை
அமாவாசை முன்னிரவு 11.46 மணிவரை
அத்தம் பிற்பகல் 5.37 மணிவரை

சுபநேரம் -3.02-4.32 மணிவரை
இராகுகாலம்-9.02-10.32 மணிவரை
அமாவாசை விரதம், மகாளய பட்ச முடிவு

சந்திராஷ்டமம்- பூரட்டாதி, உத்திரட்டாதி.

வளவன்

**மேஷம்** – உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உடல் நலன் சீராகும்.

**ரிஷபம்** – எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்திகரமாக அமையும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** – நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர்கிடைக்கும், பொன்னான நாள், வாகன சுகமுண்டு, மற்றவர்கள் போற்றும் வகையில் காரியம் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்** – பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரும்நாள், புதிய முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சகோதர வழியில் நன்மையுண்டு.

**சிம்மம்** – தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுற்றத்தார் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** – புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காட்ட வேண்டிய நாள்.

**துலாம்** – குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** – தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** – நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மகரம்** – எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** – உறவினர்கள் நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, வரவுக்கு மிஞ்சிய விரயங்கள் ஏற்படலாம், இறை வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**மீனம்** – தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடு ஆனந்தம் தரும், மன நிறைவான சம்பவங்கள் நடைபெறும் நாள், கனவு பலிதமுண்டு.

தீர்மானிக்க மனம், வழிவகுக்க அறிவு, செய்து முடிக்க கை தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாம்பழ உற்பத்தி வலயத்தை பார்வையிட்டார் அங்கஜன்



(சாவகச்சேரி)

தென்மராட்சி எழுதுமட்டுவாழ்-மிருசுவில் பகுதியில் அமைந்துள்ள ரி.இ.ஜே.சி மாம்பழ தொழில்நுட்ப விவசாய வலயத்தை நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விவசாய பிரதி அமைச்சருமான அங்கஜன் இராமநாதன் பார்வையிட்டதுடன் மாம்பழ உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்திருந்தார்.

மேற்படி தென்மராட்சி மாம்பழ உற்பத்தி வலயம் கடந்த 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 250 ஏக்கரில் 500 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கம் மற்றும் உலக வங்கியின் நிதியுதவியில் விவசாய அமைச்சினால் மேற்படி மாம்பழ உற்பத்தி வலயம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-30)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இம்மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது. (நி-5-33)

# கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கை இறுக்கமாகவே பின்பற்றும்

## ஈ.பி.டி.பி ஊடக பேச்சாளர்

(யாழ்ப்பாணம்)

இந்திய இலங்கை அரசுகளால் இணக்கம் காணப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கை அரசு இறுக்கமாகவே பின்பற்றும். இதுவே எமது கட்சியின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1974, 1976 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானதாக்கப்பட்டது.

இதேவேளை இந்தியாவில் அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தமிழகம், பாண்டிச்சேரி மாநிலங்களில் 40 தொகுதிகள் உள்ளன.

இந்த தொகுதிகளின் பாராளுமன்ற ஆசனங்களை இலக்குவைத்தே இவ்விவகாரம் ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றது.

இது காலத்துக்கு காலம் தேர்தல்கள் அண்மிக்கின்ற சமயங்களில் இந்தியாவில் பேசுபொருளாக வலம்வருவது வழமையான ஒரு விடயம். அந்தவகையிலேயே இப்போதும் இவ்வாறான கருத்துக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் பிரதமர் தினேஷ் குணவர்த்தன இந்திய ஊடகத்துக்கு தெரிவித்த கருத்தின் அடிப்படையில் பல்வேறு கருத்துக்கள் ஊடகங்களில் பரவினாலும் கடற்றொழில் அமைச்சரின் முடிவே இறுதியானதாக இருக்கும் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33-104)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகம் நடத்திய இரத்ததான முகாமானது நேற்று முன்தினம் அஞ்சல் அலுவலகத்தில் இடம் பெற்றது. (படம்-சிவசாந்தன்)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2937

**மிதுன்**

யோவ்- நீ பசுமாட்டை திருடினதா கம்ளைண்ட் குடுத்திருக்கிறாரே



சார் நான் ஒரு தப்பும் பண்ணல.
நான் ஒரு முழம் கயித்தைத்தான் திருடினேன்.
அது நுனியிலே ஒரு பசுமாடு
இருந்ததை கவனிக்கல.

**தருமிகா**

ஏய்யா யோவ் கண்டக்டரு, பஸ்ல பொம்பள புள்ளயல உட்கார சீட்டுக்கு மேல அழகா பெண்கள், பூவையர், மகளிர் மட்டும் இருக்கவும்ன்னு எழுதியிருக்கே



ஆம்பளப் பயலுவோ உட்காரு இடத்துக்கு மேல மட்டும் புகைபிடிக்காதே, திருடர்கள் ஜாக்கிரதைன்னு எழுதி போட்டிருக்கியே என்னங்கடா அநியாயமா இருக்கு

**விஷ்னு**

30000 பேர் வசிக்கும் 36 மாடிகளைக் கொண்ட பிரம்மாண்டமான குடியிருப்பு எங்கிருக்கிறது தெரியுமா?



பூகம்பம் வந்தா மக்கள் தொகையை கன்ட்ரோல் பண்ண சைனாக்காரன் பண்ணின ஏற்பாடு கோதாவரி


**கம்சா**




**ஆராதனா**




ஒரே வயிறுனு கேட்டதெல்லாம் வாங்கி போட்டனே அப்பு....



ஆனா நீ பொண்ணு பார்க்கப் போதும் போது என்னைய அசிங்கப்படுத்திட்டியே

**வக்சன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருசுவில் படுகொலை விவகாரம்

# சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கிய மன்னிப்பிற்கு எதிரான மனுக்களை விசாரிக்க மன்று அனுமதி

(கொழும்பு)

2000ஆம் ஆண்டு டிசெம்பரில் இடம்பெற்ற மிருசுவில் படுகொலைச் சம்பவத்தில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பை எதிர்த்து மாற்றுக் கொள்கைக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் தாக்கல் செய்த மனுவைத் தொடர உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

மாற்றுக் கொள்கைக்கான நிலையம், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் கொலையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பலர் தாக்கல் செய்த பல மனுக்களை பரிசீலித்த பின்னரே, பிரிவு 12(1)இன் கீழ் இந்த மனுவை விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

பொது மன்னிப்பு தொடர்பான பல ஆவணங்களை உச்ச நீதிமன்றத்துக்கு வழங்குவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது.

மனுக்கள் மீதான தங்கள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யவும், அந்த ஆட்சேபனைகளுக்கு மனுதாரர்கள் பதிலளிக்கவும் உச்ச நீதிமன்றம் அவகாசம் வழங்கி, இந்த வழக்கை அடுத்த வருடம் மே மாதம் 17ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைத்தது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 200. |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 120 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| தக்காளி | 200 | 300 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 160 |
| கோவா | 180 | 160 | 150 | 200 |
| கரட் | 260 | 260 | 300 | 300 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 100 | 140 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 300 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 120 | 150 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 240 | 400 |
| லீக்ஸ் | 160 | 160 | 140 | 150 |
| பீற்றூட் | 140 | 140 | 140 | 200 |
| கறிமிளகாய் | 350 | 200 | 300 | 320 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 100 | 160 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1200 | 1800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 280 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 150 |


**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**
**பதிவு இலக்கமும் திகதியும் ஜே/1639-12.05.1976**
**அங்கத்தவர் பட்டியல்கள் காட்சிப்படுத்தல்**

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக வாக்களிக்கத் தகுதி பெற்ற அங்கத்தவர் பட்டியல்கள் 30.09.2023 இல் மூடப்பட்டு 14.10.2023 ஆம் திகதியிலிருந்து 28.10.2023 ஆம் திகதி வரை எமது கிளைநிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்அங்கத்தவர் பட்டியலில் சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 28.1.14 இற்கமைய செயற்பாடு உடையவர்களை இனங்காணக் கூடியவாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்அங்கத்தவர் பட்டியல்கள் தொடர்பாக மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அங்கத்தவர்கள் எழுத்து மூலமான பதிலை 03.11.2023ஆம் திகதிக்குப் பிந்தாது "செயலாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து), திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

14.10.2023 (சி-7417) செயலாளர்.


## ஆன்மீக பிரசாரகர்களுக்கான கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆன்மீகப் பிரசாரகர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி நான்காவது அணியின் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆனைப்பந்தி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலக குருகுலத்தில் குறித்த திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



அன்புடையீர்,

அறிவறிந்தோர் ஆர்வமுடன் அமைத்திட்ட அறிவுத்திருக்கோவிலுக்கு அவையை ஏழு கண்டு அகமும் குளிர்ந்ததுவே ஆனந்தம் கொண்டதுவே!

மகரிஷியின் மகத்துவத்தை சொல்லாமும் சொல்வேந்தர் சுவையாக சொல்லிடுவார்
சொக்கவைப்பார்.! சிரிக்கவைப்பார்.! சிந்தனையை தூண்டிவைப்பார்.!
அமுதமொழியில் அவர் அறுசுவையும் குழைத்துதரும் அருமருந்தை அருந்திடுவோம்
அனைவருமே வாருங்கள் ஆறாண்டு நிறைவு பெற்று ஏழாண்டு காண்கையிலே
வாழ்த்த வந்தவரே வாழ்க நீங்கள் வளமுடனே.!

காலம்:-15.10.2023 (ஞாயிற்றுக்கிழமை)
இடம் :-யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
நேரம் :- மாலை 4.00 மணி

தலைமை :- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(தலைவர்,யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)

சிறப்புச் சிந்தனை உரை :- தமிழ் கூறும் நல்லுலகின் தலைசிறந்த சிந்தனையாளர் கலைமாமணி சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் (தமிழ்நாடு)

காலம்:- 14.10.2023 (சனிக்கிழமை)
இடம் :- நெல்லை முருகன் திருமண மண்டபம் ,நெல்லியடி .
நேரம் :- மாலை 4.00 மணி

தலைமை :- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(தலைவர்,யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)

சிறப்புச் சிந்தனை உரை :- தமிழ் கூறும் நல்லுலகின் தலைசிறந்த சிந்தனையாளர் கலைமாமணி சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் (தமிழ்நாடு)

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்த பேராசிரியர்களால் மனவளக்கலை யோகா பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

யாழ் அறிவுத்திருக்கோவில் இல.81 பிறவுன் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு
021 2222 772 ,0777368745 ,0714403968 (சி-7416)



SINNATHURAI CHILDREN FOUNDATION සින්නත්තුරෛ ළමා පදනම சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம்

**திருக்குறள் பாவோதல் போட்டி - 2023**

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம் மற்றும் பனுவல் புக்மார்ட் (Book Mart), வலம்புரி ஊடக அனுசரணையுடன் நடாத்தும் பதினான்கு (14) வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான திருக்குறள் பாவோதல் போட்டி

மதிப்பிற்குரிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் கற்கை நலன்விரும்பிகள் அனைவருக்கும்

மேற்படி போட்டியில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் பிரதேச அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் தொகையை அடிப்படையாகக் கொண்டு இடம், காலம், நேரம் முதலானவை வலம்புரி ஊடகம் மூலம் அறிவிக்கப்படும்.
விண்ணப்ப முடிவுத் திகதி 01.12.2023 ஆகும்.

வயதெல்லை 7 - 8 வரை : அன்புடைமை, புலால் மறுத்தல் ஆகிய அதிகாரங்களில் இருந்து 05 குறள்கள்.
வயதெல்லை 9 - 10 வரை : விருந்தோம்பல், இனியவை கூறல், கொல்லாமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 06 குறள்கள்.
வயதெல்லை 11 - 12 வரை : செய் நன்றி அறிதல், அடக்கமுடைமை, பயனில சொல்லாமை, ஈகை ஆகிய அதிகாரங்களில் இருந்து 08 குறள்கள்.
வயதெல்லை 13 - 14 வரை : கல்வி, வாய்மை, மானம், பெரியாரைப் பிழையாமை, பண்புடைமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 10 குறள்கள்.

குறிப்பு : குறளும் பொருளும் சொல்லும் அழகு, மேடை ஆளுமை, நிலை, உச்சரிப்பு, சீர் உடை அனைத்தும் கவனத்திற்கொண்டு நடுவர்களால் புள்ளி வழங்கப்பட்டு திறமை மிக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களிற்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி- சி.காண்டீபன் (செயலாளர் - SCF), பனுவல் புக் மாட் (Book Mart), இல.12, யாழ் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது scfthirukkural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
2. முகவரி, தொடர்பு இலக்கம், மின்னஞ்சல்
3. பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் தரம்.
4. பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்.

(இ)

தொடர்புகளுக்கு
0767427596

தகவல் நிர்வாகம் SCF நிறுவனம், பனுவல் Book Mart | ஊடக அனுசரணை "வலம்புரி" | நிர்வாகப் பொறுப்பாளர் SCF தலைவர் - சி.துரைராஜா பதிவு எண் GA3126


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வட காசாவிலிருந்து

# 10 லட்சம் மக்களை உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவு



(ஜெருசலேம்)

வட காசாவில் உள்ள 10 லட்சம் மக்களை உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையே தொடர்ந்து போர் இடம்பெற்று வரும் நிலையிலேயே இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த சனிக்கிழமை திடீரென தாக்குதல் நடத்தியிருந்தனர். அத்துடன் பலரைப் பணயக் கைதிகளாகவும் பிடித்துச் சென்றுள்ளனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசா மீது ஏவுகணைகளை வீசி இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில், வட காசாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை ஊழியர்கள் மற்றும் 10 லட்சம் மக்களை அடுத்த 24 மணி நேரத்தில் துரிதமாக தெற்கு பகுதிக்கு வெளியேற வேண்டும் என இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இஸ்ரேலுக்க...

# விரைவில்...

## ஹமாஸ்...

(காசா)

இஸ்ரேல் மீதா...

விரைவில் உலகமே...

அமைப்பின் தளபதி...



இஸ்ரேல் - காசா மோதல் நீடித்து வரும் நிலையில் ஹமாஸ் அமைப்பின் தளபதி மஹ்மத் அல் ஜஹார் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இணையத்தில் வைரலாக பரவி வரும் அந்த காணொளியில் அவர் தெரிவித்திருப்பதாவது,

"இஸ்ரேல் மீதான எங்களின் தாக்குதல் ஆரம்பம்

# பாக். கோர விபத்து 12 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இடம் பெற்ற கோர விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தானின் பாபர் லோய் என்ற பகுதியில் உள்ள நெடுஞ்சாலை அருகே வேன் ஒன்று சென்று கொண்டிருந்த போது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த கார் மீது வேன் வேகமாக மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த கோர விபத்தில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

படுகாயம் அடைந்த 16 பேரை மீட்பு படையினர் மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

# ஒப்ரேஷன் அஜய் திட்டம் 212 இந்தியர்கள் நாட்டிற்கு

(டில்லி)

'ஒப்ரேஷன் அஜய்' திட்டத்தின் மூலம் இஸ்ரேலில் இருந்து இந்தியாவின் தலைநகருக்கு வந்த முதல் விமானத்தில் 212 பேர் தாயகம் திரும்பியுள்ளனர்.

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் மோதல் வலுத்து வருவதால், இஸ்ரேலில் உள்ள 18 ஆயிரம் இந்தியர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, அங்கு உள்ளவர்களை பத்திரமாக மீட்கும் பணியில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்காக 'ஒப்ரேஷன் அஜய்' என்ற திட்டம் தொடங்கப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ஜெருசலேத்தில் இருந்து ஏஐ 1140 விமானம் இந்தியா புறப்பட்டது. இதில் தாயகம் திரும்ப விரும்பிய மக்கள் அழைத்து வரப்பட்டனர். இந்தியா திரும்பியவர்களை மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் வரவேற்றார்.

தொடர்ந்து இஸ்ரேலில் இருந்து மக்கள் இந்த திட்டத்தின் மூலம் இந்தியா திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5)

# சிரியாவின் வி... குண்டுவீசித் ...



(ஜெருசலேம்)

இஸ்ரேல் படை சிரியாவின் இரு சர்வதேச விமான நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


அதன்படி, டமாஸ்கஸ் மற்றும் அலெப்போ சர்வதேச விமான நிலையங்கள் மீது இஸ்ரேல் குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக சிரியா தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல்களினால் விமான நிலையங்களின் ஓடு பாதை அழிக்கப்பட்டுள்ளதோடு, விமான நிலையங்களின் செயற்பாடுகள் முற்றாக தடைப்ப

...ட்டுள்ள ... தகவல்க ... ஈரா ... அமைச்

## போரை தீவிரப்படுத்த

# அவசரகால அமைச்சரவையை உருவாக்கிய இஸ்ரேல் பிரதமர்



(ஜெருசலேம்)

ஹமாஸ் தீவிரவாத இயக்கத்திற்கு எதிரான போரை தீவிரப்படுத்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அவசர கால அமைச்சரவையை உருவாக்கி உள்ளார்.

காசா முனையில் இருந்து செயற்படும் ஆயுதம் ஏந்திய ஹமாஸ் தீவிரவாதிகள், இஸ்ரேலுக்குள் ஊடுருவி நடத்திய கொடூர தாக்குதல்களில் 2000 த்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இது இஸ்ரேலிய வரலாற்றில் மிக கொடூர தீவிரவாத தாக்குதல்களாகும்.

இதையடுத்து காசா பகுதிகளில் வான் வழியே குண்டு மழையை பொழிந்த இஸ்ரேல் படையினர், ஹமாஸுக்கு பதிலடி கொடுத்து வருகின்றனர்.

ஹமாஸ் தீவிரவாதிகளை முற்றிலும் ஒழிக்க இஸ்ரேல் எந்த நேரத்திலும் தரைவழி படையெடுப்பை தொடங்கலாம் என்ற நிலையில், எல்லையில் ஆயிரக் கணக்கான துருப்புகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, முன்னாள் பாதுகாப்புத் துறை தலைவர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரை கொண்ட அவசரகால அமைச்சரவையை இஸ்ரேல் அமைத்துள்ளது.

இது குறித்து பேசிய அவர், "நாங்கள் ஒரு தேசிய அவசரகால அரசாங்கத்தை நிறுவியுள்ளோம். இஸ்ரேல் மக்கள் ஒன்றுபட்டுள்ளனர். அரசும் அவர்களுடன் ஒன்று பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ. எஸ்-ஐ விட மோசமான ஒரு கொடூரமான எதிரியுடன் நாங்கள் போராடுகிறோம். பெண்கள் மற்றும் சிறுவர்கள் தலையில் சுடப்பட்டு கொல்லப்பட்டனர். ஆண்களும் பெண்களும் உயிருடன் எரிக்கப்பட்டனர். இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்" என்றார். (நி-5)

# இனி எவரும் த... இஸ்ரேல் இரா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லுக்கான தாக்குதல் வெறும் ஆரம்பம் மட்டுமே

# வில் உலகம் எமது கட்டுப்பாட்டிற்குள்

## றமாஸ் அமைப்பு எச்சரிக்கை

**மீதான தாக்குதல் வெறும் ஆரம்பம் மட்டுமே. லகமே எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வரும் என ஹமாஸ் தளபதி தெரிவித்துள்ளார்.**






மட்டுமே. உலகம் முழுவதும் எங்கள் செல்வாக்கை விரிவு படுத்துவதே எங்களின் நோக்கம். விரைவில் உலகம் முழுவதும் எங்கள் கட்டுப் பாட்டில் வரும். முழு பிரபஞ்ச மும் எங்கள் சட்டத்தின் கீழ் இருக்கும்.

மேலும் லெபனான், சிரி யாவில் உள்ள அனைத்து அரபு நாடுகளின் பாலஸ் தீனியர்கள் மற்றும் அரே பியர்களுக்கு எதிராக அநீதி, அடக்குமுறை மற்றும் கொலைகள், குற்றங்கள் இல் லாத 510 மில்லியன் சதுர கிலோ மீற்றர் கொண்ட நிலப்பரப்பு ஒரு அமைப்பின் கீழ் வரும்" என்று தெரிவித் துள்ளார்.

இதற்கு முன் ஒவ்வொரு ஹமாஸ் போராளிகளையும் கொல்வோம் என இஸ்ரேல் சபதம் எடுத்துள்ளது.

இதற்கிடையே இஸ்ரேலிய வீரர்கள் மற்றும் பொதுமக் களை பணயக் கைதிகளாக வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பினர் காசாவில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பணயக் கைதியை அனு ப்பி அவர்களை தூக்கிலிட போவதாகவும் அச்சுறுத்தி உள்ளனர். (நி-5)

# ர் விமான நிலையங்களை சித் தாக்கிய இஸ்ரேல்



ட்டுள்ள தாகவும் ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் வெளிவிவகார அமைச்சர் டமாஸ்கஸ் செல்ல உள்ளதாக தகவல் கள் வெளி யாகி வரும் நிலையில் இந்த சம்பவம் அரங்கேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பணயக் கைதிகளை விடுவிக்கும் வரை மின்சாரம், நீர், எரிபொருள் இல்லை

## இஸ்ரேல் எரிசக்தி அமைச்சர்

(ஜெருசலேம்)

பணயக் கைதிகளை விடுவிக்கும் வரை, அத் தியாவசிய பொருட்கள் மற் றும் மனிதாபிமான உதவி களை காசாவிற்குள் அனு மதிக்காது என இஸ் ரேலின் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட இஸ்ரே லியர்கள் வீடு திரும்பும் வரை மின்சாரம், தண் ணீர் மற்றும் எரிபொருள் என்பன காசாவிற்குள் செல்லாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.



ஹமாஸை முழுமை யாக ஒழிப்பதாக உறுதி யளித்துள்ள இஸ்ரேல் காசா பகுதியில் முழு முற்று கையை அறிவித்து தாக் குதல் நடத்தி வருகின் றது. (நி-5)

# தம் தாக்குதல் நடத்த முடியாது இராணுவ வீரரின் சவால்



(ஜெருசலேம்)

மிக விரைவில் காசா பகுதியில் இருந்து இனி எவரும் தாக்குதல் முன் னெடுக்காத வகையில் சூழலை உருவாக்குவோம் என இஸ்ரேல் இராணுவ வீரர் சவால் விடுத்துள் ளார்.

இஸ்ரேலுக்கும் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் அமைப்பினருக்கும் கடுமை யான யுத்தம் நடைபெற்று வருகிறது. இதில் இரு தரப்பிலும் சேர்த்து 4000 இற்கும் மேற்பட்டோர் உயி ரிழந்துள்ளனர்.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பு மொத்தமாக அழிக்கப்படும் வரையில் போர் தொடரும் என்றே இஸ்ரேல் பிரதமர் பெஞ்ச மின் நெதன்யாகு சூளுரை த்துள்ளார். அத்தோடு, இஸ் ரேல் உருவாகி 75 ஆண்டு களுக்கு பிறகு, எதிர்கொள் ளும் மிகவும் கொடூரமான தாக்குதல் சம்பவமாக இது கருதப்படுகிறது.

மேலும், இஸ்ரேல் காசா மீது தரைவழி தாக்குத லுக்கும் தயாராகி வருகின்ற நிலையில் காசா எல் லையில் கனரக ஆயு தங்களை குவித்துள்ள துடன், 3 லட்சம் வீரர் களை இஸ்ரேல் தயார் நிலையில் வைத்துள்ள தாக தகவல் வெளியாகி யுள்ளது.

நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளி யிட்ட இஸ்ரேல், கடந்த சனிக்கிழமை யிலி ருந்து மொத்தம் 4,000 டன் வெடிபொருட்களைக் கொண்ட சுமார் 6,000 வெடிகுண்டு களை காஸா மீது வீசித் தாக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

அதேவேளை, உலக நாடுகள் ஐ.எஸ் அமை ப்பை ஒடுக்கியது போல, ஹமாஸ் படை யினரை தாம் ஒடுக்க இருப்பதாகவும் நெதன் யாகு மிரட்டல் விடுத் துள்ளமை குறிப்பிட த்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகேது பெயர்ச்சிப் பலன்கள்

## 08.10.2023-25.04.2025



கும்ப இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் 2 ஆம் இடமான குடும்ப ஸ்தானத்திற்கு பெயர்ச்சியாகிறார். அதேநாளில் கேது பகவான் உங்கள் இராசிக்கு அஷ்டம ஸ்தானத்திற்கு வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும் கேதுவும் அந்த இடத்தில் சஞ்சரித்து, அங்குள்ள நட்சத்திரப் பாதசார அடிப்படையில் பலன்களை வழங்குவார்கள்.

## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தன ஸ்தானத்திற்கு வரும் ராகுவால், தன வரவு திருப்தியாக இருக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். .தொல்லை கொடுத்த எதிரிகள் விலகுவர். இல்லம் தேடி நல்ல தகவல்கள் வரலாம். கொடுக்கல் - வாங்கல்கள் சரளமாக இருக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகள் உண்டு.

அஷ்டம ஸ்தானமான 8 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. குடும்பச்சுமை கூடும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. உடல்நலக் குறைபாடு ஏற்படும். வீண் விரயங்களில் இருந்து விடுபட சுப விரயங்களை மேற்கொள்ளலாம். தைரியமும் தன்னம்பிக்கையும் தக்க சமயத்தில் கைகொடுக்கும்.

### குரு மற்றும் சனி வக்கிர காலம்

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.9.2024 முதல் 22.01.2025 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். அவரது வக்கிர காலத்தில் பணத்தேவை அதிகரிக்கும். குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றும். கொடுக்கல் - வாங்கல்களில் இருந்த சுமுகமான நிலை மாறும். உடன்பிறப்புகளின் வழியே மனக்கசப்பு உண்டாகக் கூடும். உத்தியோகத்தில் இடமாறுதல் திருப்தி தராது.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும் 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். அவரது வக்கிர காலத்தில் விரயங்கள் அதிகரிக்கும். வீண்பழி வந்துசேரும். அசையாச் சொத்துக்களை வாங்குவதில் குறுக்கீடுகள் ஏற்படும். ஆரோக்கியப் பாதிப்பும் உண்டு. குடும்பப் பெரியவர்களை கலந்து பேசி முடிவெடுங்கள்.

### சனிப்பெயர்ச்சி காலம்

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் செல்கிறார். இக்காலத்தில் உங்களுக்கு ஜென்மச் சனியின் ஆதிக்கம்




உருவாகிறது. எனவே தடை, தாமதம் ஏற்படும். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காது. அருகில் உள்ளவர்களின் ஆதரவு குறையும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வீண் செலவை தவிருங்கள்.

### குருப்பெயர்ச்சி காலம்

01.05.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு செல்கிறார். உங்கள் இராசிப்படி அவர் அர்த்தாஷ்டம குருவாக இருந்தாலும் அவர் பார்வைபடும் 8, 10, 12 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்துசேரும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டு.

### பெண்களுக்கான பலன்கள்

இந்த ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். அதே நேரம் விரயங்கள் ஏற்பட்டு சேமிக்க இயலாமல் போகலாம். எனவே சுபவிரயங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கணவன் - மனைவிக்குள் அனுசரணை இருந்தால், குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகளின் திருமண முயற்சி கைகூடும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

இரண்டாம் இடத்து ராகுவால் இனிய பலன்கிடைக்கவும் அஷ்டமத்து கேதுவால் ஆரோக்கியத் தொல்லை அகலவும் இல்லத்து பூஜையறையில் நாக கவசம் பாடி ராகு-கேதுக்களை வழிபாடு செய்யுங்கள்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



மீன இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் உங்கள் இராசியிலேயே பிரவேசிக்கப் போகிறார். அதே நேரத்தில் சப்தம ஸ்தானத்திற்கு கேது வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும் கேதுவும் இந்த இடத்தில் சஞ்சரித்து, நட்சத்திரப் பாதசாரங்களின்படி பயணித்து பலன்களை

## கொடுக்கல்–வாங்கல்கள் சுமுகமாக முடியும்!

வழங்குவார்கள். பொதுவாக ஜென்மத்தில் ராகுவும் ஏழில் கேதுவும் இருந்தால் சர்ப்பதோஷ ஆதிக்கம் என்று சொல்வார்கள். எனவே சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்வது நல்லது.

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு, இப்பொழுது ஜென்ம இராசிக்கு வருகிறார். அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரித்த கேது சப்தம ஸ்தானத்திற்கு வருகிறார். எனவே குடும்பத்தில் கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நேரம் இது. முன் கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் தளரவிட வேண்டாம். பொருளாதாரம் திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் கூடும். அடிக்கடி மாற்றங்களைச் சந்திப்பீர்கள். வீண் விரயங்களில் இருந்து தப்பிக்க சுபவிரயங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தகராறு செய்தவர்கள் தானாக விலக தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். சப்தம ஸ்தானத்தில் கேது இருப்பதால், வாழ்க்கைத் துணையோடு அனுசரித்துச் செல்வதன் மூலம் மட்டுமே அமைதி காண இயலும். குடும்பச் சுமை கூடும்.

### குரு மற்றும் சனி வக்கிர காலம்

08.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.09.2024 முதல் 22.01.2025 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். அவர் வக்கிரம் பெறும்பொழுது மிகக் கவனமாக செயற்பட வேண்டும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அடிக்கடி இடமாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் வந்து கொண்டேயிருக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க இயலாது. வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

08.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும் 10.07.2024 முதல் 05.11.2024 வரை கும்ப இராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். அவரது வக்கிர காலத்தில் சஞ்சலங்கள் அதிகரிக்கும். உங்கள் இராசிக்கு லாபாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் சனி இருப்பதால், லாபம் முழுவதும் விரயமாகும். நல்ல சந்தர்ப்பங்கள் வந்தாலும் அதை பயன்படுத்த இயலுமா? என்பது சந்தேகம் தான்.

### சனிப்பெயர்ச்சி காலம்

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு




சனி பகவான் செல்கிறார். இப்பொழுது ஏழரைச் சனி ஆரம்பமாகிவிட்டது. அடுத்த 7 1/2 ஆண்டுகளுக்கு சனிக்கிழமை விரதமும் சனீஸ்வர வழிபாடும் அவசியம். இரண்டாவது சுற்று நடப்பவர்கள் ஓரளவு நற்பலன்களைப் பெறுவார்கள். இருப்பினும் விரயங்கள் தவிர்க்க பயனுள்ளதாக இருக்கும்.

### குருப்பெயர்ச்சி காலம்

01.05.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு செல்கிறார். உங்கள் இராசிநாதன் குரு, சகாய ஸ்தானத்திற்கு செல்வது யோகம்தான். அவரது பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே கல்யாண முயற்சிகள் கைகூடும். கொடுக்கல்-வாங்கல் சுமுகமாக இருக்கும். முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும். இடம் வாங்கும் யோகம் உண்டு.

### பெண்களுக்கான பலன்கள்

இந்த ராகு-கேது பெயர்ச்சியில் ஜென்ம ராகுவாகவும் சப்தம கேதுவாகவும் இருப்பதால் ஏற்றமும் இறக்கமும் கலந்த வாழ்க்கையே அமையும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் செல்லுங்கள். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு திடீர் இடமாற்றம் வரும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

ஜென்ம ராகுவால் சிறப்பான வாழ்க்கை அமையவும் சப்தம கேதுவால் தடைகள் அகலவும் இல்லத்து பூஜையறையில் நாக கவசம் பாடி ராகு-கேதுக்களை வழிபட்டு வாருங்கள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக்காலப் பராமரிப்பு—ஓர் அர்த்தமுள்ள அஸ்தமனம்

சண்முகம் ஐயா ஓர் நுரையீரல் அழற்சி நோயாளி. 6 வருடங்களாக மிகவும் கிரமமாக மருத்துவ சிகிச்சை நிலையத்திற்கு சமுகமளித்து மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றுபவர். கடந்த ஒரு வருட காலமாக ஐயாவுடைய நோய்க்குணங்குறிகள் வீரியமடைந்துள்ளமையால் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மருத்துவ நிபுணர்களினால் பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை முறைகள எந்த ஒரு முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாத நிலையில் ஐயா வைத்தியசாலையிலேயே தொடர்ந்து தங்கியிருக்க வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. அதாவது சுவாச நோயின் தாக்கமானது வைத்தியசாலையில் வழங்கப்படும் அதிவீரிய சிகிச்சை முறைமைகளால் கூட அவரது சுவாசக் குணங்குறிகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியாத ஒரு கட்டத்தை அடைந்துவிட்டது. அடிக்கடி ஏற்படும் மூச்சுத்திணறலும் அதிகரிக்கும் ஒட்சிசன் தேவையும் ஐயாவுடைய பயத்தையும் வேதனையையும் நாளுக்குநாள் அதிகமாக்கிக் கொண்டு சென்றது.

**இவ்வாறான ஒரு நிலைமையில் சண்முகம் ஐயாவை நாங்கள் எவ்வாறு பராமரிக்க முடியும்?**

இவருடைய நோய்குணங்குறிகளையும் அதனால் ஏற்படும் வேதனைகளையும் பயத்தையும் பதற்றத்தையும் எவ்வாறு குறைக்க முடியும்? இதற்கு பரிகாரமாகவே மருத்துவத்துறையில் இறுதிக்கால பராமரிப்பு முறை (End of life care) பரிந்துரைக்கப்படுகின்றது.

**இறுதிக்கால பராமரிப்பு என்றால் என்ன? அதனால் ஏற்படும் அனுகூலங்கள் எவை?**

இறுதிக்கால பராமரிப்பு எனப்படுவது நோயாளி ஒருவர் அல்லது ஒரு சாதாரண மனிதன் தனது வாழ்க்கையின் இறுதிக் காலகட்டத்தை எட்டும் போது ஏற்படும் உடல் உபாதைகளையும்,குணங்குறிகளையும் இயன்ற அளவுக்கு குறைத்து அவர்களின் நாளாந்த வாழ்க்கையை வலி, வேதனையற்ற நாட்களாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறையாகும்.

இறுதிக்கால பராமரிப்பு என்று சொல்லப்படும் போது மருந்துகள் மூலம் அவரது வாழ்க்கைக் காலத்தை குறைத்துக் கொள்வது என எவரும் பிழையான அர்த்தம் கொள்ளக்கூடாது.

இறுதிக்காலப்பராமரிப்பு என்ற சிகிச்சை முறையானது ஒரு அர்த்தமுள்ள, வேதனையற்ற இறுதிக் கால வாழ்க்கையை ஒருவருக்கு வழங்கும் என்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் நிரூபிக்கப்பட்டதுமான உண்மையாகும். மேலைத்தேய நாடுகளில் இறுதிக் காலப்பராமரிப்பு மருத்துவ பராமரிப்பின் ஒரு பகுதியாக காலங்காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**இறுதிக்காலப் பராமரிப்பு யாருக்கு வழங்கப்படலாம்?**

ஒரு நோயாளியோ அல்லது வயோதிபரோ தமது வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தை நெருங்கும் சந்தர்ப்பத்தில், அதாவது அவரது நோய் தாக்கங்கள் அதன் உச்சக்கட்டத்தை அடையும் போதோ அல்லது எவ்வித சிகிச்சை முறைமைகளும் அந் நோயின் குணங்குறிகளையோ, நோயின் தாக்கத்தையோ, குறைத்துக் கொள்ள முடியாதவிடத்து நோயாளியின் வலி, வேதனை, மூச்சுத்திணறல், பயம் ஆகிய வற்றைக் குறைப்பதற்காக இறுதிக் காலப்பராமரிப்பு சிகிச்சை வழங்கப்படுகிறது.



**இறுதிக்காலப் பராமரிப்பு சிகிச்சை முறைகள் மூலம் ஒரு நோயாளி எவ்வாறான நன்மைகளை அடைய முடியும்?**

இறுதிக்காலப் பராமரிப்பு என்பது நோய் தணிப்பு சிகிச்சை (Palliative Care) முறை மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. இது பிரதானமாக நோயாளிக்கு வேதனை கொடுக்கும் வலி, வாந்தி, வயிற்றுக்குமட்டல்,அதிக உமிழ்நீர்ச்சுரப்பு ஆகிய குணங்குறிகளையும் இதனால் நோயாளிக்கு ஏற்படும் மனப்பயம், பதற்றம் ஆகியவற்றையும் குறைவடையச் செய்வதற்காக வழங்கப்படுகிறது. இவ்வாறு சிகிச்சைகள் வழங்கப்படும் போது அந்நோயாளி மேற்குறிப்பிட்ட குணங்குறிகளிலிருந்து முன்னேற்றமடைவதனால் சௌகரியமாக (Comfortable ) தனது நாட்களை கழிக்க முடியும்.

இத்தகைய நிலை நோயாளிக்கு மட்டுமல்லாது அவர்களை பராமரிக்கும் அவரது வீட்டார் உறவினர்களுக்கும் சமாதானத்தையும் மன நிறைவையும் கொடுக்கும். இப்பராமரிப்பின் போது மருந்துகள் மட்டுமல்லாது நோயாளியின் விருப்பு வெறுப்புகள், ஆத்மீக கொள்கைகள், கலாசார நம்பிக்கைகள் ஆகியனவும் கண்டறியப்பட்டு அத்தகைய விழுமியங்களும் பாதுகாக்கப்படும் வகையில் மனவள சிகிச்சைகளும் வழங்கப்படும். அதனால் நோயாளி ஒருவர் தனது வாழ்க்கையின் இறுதிக் காலகட்டத்தில் கூட தனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நாட்களை சமாதானமாகவும் மனநிறைவோடும் தனது அன்புக்குரியவர்களுடன் செலவிட முடியும்.

**இறுதிக்காலப் பராமரிப்பு எவ்வாறு வழங்கப்படுகின்றது?**

நோயாளி ஒருவர் தனது நோய் கண்டறியப்பட்ட நாள் முதற் கொண்டே அந்நோயானது முற்றாகக் குணப்படுத்தக்கூடியதா? அல்லது வாழ்நாள் வரை அந்நோயானது முற்றாக குணப்படுத்த முடியாது கட்டுப்பாட்டில் பராமரிக்க வேண்டியதா? என்பது பற்றி அறிவுறுத்தப்படுவர். உதாரணமாக பெரும்பாலான தொற்றாநோய்கள், உடல் உறுப்புக்களைப் பாதிப்படையச்செய்யும் நோய்கள், புற்றுநோய் ஆகியன பூரணமாக குணப்படுத்த முடியாதவை. ஆயினும் இவற்றை மருத்துவ சிகிச்சை முறைகளால் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதுடன் நோய் தாக்கத்தின் வேகத்தை குறைத்துக் கொள்வதே மருத்துவ சிகிச்சையின் நோக்கமாகும்.

எவ்வாறிருப்பினும் இந்நோயின் தாக்கங்களும் அதன் வீரியமும் ஒருவருக்கொருவர் வேறுபடலாம். ஒரு காலகட்டத்தில் இவ்வகையான நோய்கள் மேலதிக சிகிச்சைமுறைகளுக்கும் பயனளிக்காத ஒரு நிலையை அடைய நேரிடுகின்றது.

நோயாளி ஒருவர் இக்கால கட்டத்தை நெருங்கும் சந்தர்ப்பத்தில் இறுதிக்காலப் பராமரிப்பு சிகிச்சை முறைகளை கருத்திற்கொள்ள முடியும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் நோயாளி வைத்தியரோடு தனது இறுதிக்காலப் பராமரிப்பு சம்பந்தமாக கலந்தாலோசித்து தனது விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்த முடியும்.

மேலாக நோயாளி ஒருவர் இவ்வாறான கட்டத்தை எட்டும் சந்தர்ப்பங்களில் வைத்தியரினாலும் இப்பராமரிப்புமுறை பற்றி பரிந்துரைக்கப்படுகிறது. எனவே நோயாளர்கள் தமது இறுதிக்கால பராமரிப்பு பற்றிய தமது விருப்பு வெறுப்புக்கள் முற்கூட்டியோ அல்லது நோயின் தாக்கங்கள் தீவிரமடையும் போதோ வைத்தியருடன் கலந்தாலோசிக்க முடியும்.

**எனது இறுதிக்கால பராமரிப்பு முறைகள் பற்றி நான் எவ்வாறு முடிவு செய்ய முடியும்?**

இறுதிக்காலப் பராமரிப்பு முறைகளை பற்றி நோயின் தாக்கத்தின் முன்கூட்டியே தீர்மானிக்க முடியும். அல்லது நோய் இறுதிக்கட்டத்தை அடையும் போதோ, மேலதிக சிகிச்சைகள் பலனளிக்காத நிலை ஏற்படும் போதோ, நோயின் இறுதிக்கால்கட்டத்தில் நோயின் குணங்குறிகளையும் வேதனைகளையும் குறைத்து ஒரு ஆரோக்கியமான இறுதி நாட்களை கழிக்க விரும்புகின்றமையை வைத்தியர்களுக்கு நோயின் எந்தக்கட்டத்திலும் தெரிவித்துக் கொள்ள முடியும்.

**எனவே இறுதிக்கால பராமரிப்பு மூலமாக**

- நோயாளியின் வேதனைகள், குணங்குறிகள் கட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் நோயாளியின் ஆயுட்காலத்தில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது.
- நோயின் குணங்குறிகளை குறைப்பதற்கான சகல சிகிச்சைகளும் அளிக்கப்படும்.
- நோயாளிக்குத் தேவையான உளவள, ஆத்மீக ஆதரவு வழங்கப்படும்.
- நோயாளிக்கும் அவரது அன்புக் குரியவர்களுக்கும் வேதனையற்ற, பயமற்ற, சௌகரியமான இறுதி நாட்களை வழங்க முடியும்.

இதனால் சண்முகம் ஐயாவுக்கு அவரது மூச்சுத்திணறலைக் குறைப்பதற்காக ஒட்சிசன் மற்றும் சுவாச வழி மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டன. நோயின் வீரியம் பற்றியும் அதன் குணப்படுத்த முடியாத இறுதிக்கட்ட தாக்கங்கள் பற்றியும் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

ஓரிரு நாட்களில் அவர் சாந்தமாகவும் முகத்தில் ஒருவித தெளிவுடனும் காணப்பட்டதுடன் வைத்திய குழுவோடு தனது முன்னேற்றத்தை பகிர்ந்து கொண்டதையும் காண முடிந்தது. இவ்வாறான மாற்றங்களை அவரின் குடும்ப உறுப்பினர்களிடமும் காண முடிந்தது. பிந்திய நாட்களில் ஐயா பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சைகளுடன் மிகுதி நாட்களை தன் குடும்பத்தினருடன் வீட்டில் கழிக்க விரும்பியமையால் வைத்திய உதவிகளுடன் (Home Based palliative care ) வீடு சென்றார்.

Dr. J பிரதீபன்,
பொது வைத்திய நியுணர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 308





"குருதேவரே! அங்கே எந்தக் கடவுளைத் தரிசனம் செய்தீர்கள்?" "சந்தேகம் என்ன? நாராயண மூர்த்தியைத்தான்"

"இராமேஸ்வரக் கோயிலுக்குள் இலிங்க வடிவம் வைத்திருப்பதாக அல்லவோ கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால்தானே இங்குள்ள வீர சைவ பட்டர்மார்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு அவ்வளவு கொக்கரித்தார்கள்?"

"பிள்ளாய்! நீ திருநகரியில் திரு அவதாரம் செய்த நம் சடகோபரின் அடியார்க்கடியான் என்று நாமம் பூண்டிருப்பது சத்தியந்தானே?"

"அதில் என்ன சந்தேகம்?"

"நம்மாழ்வாரின் அருள் வாக்கைச் சற்று ஞாபகப் படுத்திக்கொள். நீ மறந்திருந்தால் நானே நினைவூட்டுகிறேன் கேள்.

'இலிங்கத்திட்ட புராணத் தீரும்
சமணரும் சாக்கியரும்
வலிந்து வாது செய்வீர்களும் மற்று நுந் தெய்வமுமாகி நின்றானே!

இவ்வாறு சடகோபரே சாதித்திருக்கும் போது சிவலிங்கத்தில் நான் நாராயணனைத் தரிசித்தது தவறா?"

."ஆகா! சடாகோபரின் அருள்வாக்கே! வாக்கு! இலிங்கத்தை வழிபடுவோரைச் சமணரோடும் சாக்கியரோடும் கொண்டு போய்த் தள்ளினார் பாருங்கள்."

"அப்பனே! உன் குதர்க்க புத்தி உன்னை விட்டு எப்போது நீங்குமோ தெரியவில்லை. நம் சடகோபர் மேலும் சொல்லியிருப்பதைக் கேள்:

'நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச்
சீரார் சுடர்கள் இரண்டாய்ச் சிவனாய் அயனாய்

உள்ளவன் ஸ்ரீ நாராயண மூர்த்தியே என்று திருவாய் மலர்ந்திருக்கிறார். இன்னும் கேள், திருமலை! கேட்டு உன் மனமாசைத் துடைத்துக்கொள்!

'முனியே நான்முகனே முக்கண்ணப்பா!
என் பொல்லாக் கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே என் கள்வா!
தனியே ஆருயிரே என் தலை மிசையாய் வந்திட்டு

கேட்டாயா, திருமலை 'முக்கண்ணப்பா!' என்று நம் சடகோபர் கூவி அழைத்துத் தம் தலைமீது வரும்படி பிரார்த்தித்திருக்கிறார். நீயோ சிவன் கோயிலுக்கு நான் போனது பற்றி ஆட்சேபிக்கிறாய்"

"குருதேவரே! மன்னிக்க வேண்டும் அபசாரத்தை க்ஷமிக்க வேண்டும். நம்மாழ்வாரின் பாசுரங்கள் அனைத்தையும் தெரிந்து கொள்ளாமையினால் வீண் சண்டைகளில் காலங்கழித்தேன். தங்களையும் சந்தேகித்தேன். இனி எனக்கு ஒரு வரம் கொடுத்து அருள் வேண்டும்."

"என்ன வரம் வேண்டும் என்று சொன்னாயானால், கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம்."

"திருக்குருகூர் சென்று அங்கேயே தங்கிவிட ஆசைப்படுகிறேன். நம் சடகோபரின் ஆயிரம் பாடல்களையும் சேகரித்துக் கொண்டு பிறகு ஊர் ஊராகச் சென்று அந்தப் பாடல்களைக் கானம் செய்ய விரும்புகிறேன்."

"இந்த ஆசை உனக்கு ஏன் வந்தது?"


"வடவேங்கடத்திலிருந்து வரும் வழியில் வீர நாராயணப் பெருமாள் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்கள் சிலவற்றைப் பாடினேன். அந்தச் சந்நிதியில் கைங்கரியம் செய்யும் ஈசுவரப்பட்டர் என்னும் பெரியவர் கேட்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார்."

"ஈசுவர பட்டர் மகா பக்திமான் நல்ல சிஷ்டர்."

"அவருடைய இளம் புதல்வன் ஒருவனும் அவர் அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்தான். அந்த இளம் பாலகனின் பால்வடியும் முகம் ஆழ்வார் பாசுரத்தை கேட்டுப் பூரண சந்திரனைப் போல் பிரகாசித்தது. 'மற்றப் பாடல்களும் தெரியுமா?' என்று அந்தச் சின்னஞ்சிறு பிள்ளை பால் மணம் மாறாத வாயினால் கேட்டான். 'தெரியாது' என்று சொல்ல எனக்கு வெட்கமாயிருந்தது. ஆழ்வார்களின் தொண்டுக்கே ஏன் இந்த நாயேனை அர்ப்பணம் செய்து விடக் கூடாது என்று அப்போதே தோன்றியது. இன்றைக்கு அந்த எண்ணம் உறுதிப் பட்டுவிட்டது."


"திருமலை அவரவர்களும் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கீதாச்சாரியார் அருள்புரிந்திருக்கிறார் அல்லவா?"


(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மீண்டும் மீண்டுமா ஏமாந்து போன திருடன்





முன்னொரு காலத்தில், நாகலாபுரம் அப்படினு ஒரு அழகான கிராமம் இருந்தது. அந்த கிராமத்தில் மாயா என்ற பெண் இருந்தாள். அவளுக்கு சோம்பேறியான கணவன் ஒருவன் இருந்தான். எந்த அளவுக்கு சோம்பேறி என்றால், வடிவேலு ஒரு படத்தில் சும்மா இருக்கிறதே வேலையாக சொல்வார் இல்லையா அந்த அளவுக்கு படுசோம்பேறி.

இவர்களுக்கு பாழாய் போன ஒரு நிலம் இருந்தது. மாயா தினமும் அங்கு சென்று அதை சரி செய்வாள். ஆனால் அது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அந்த நிலத்தின் அருகில் ஒரு கோவில் இருந்தது. அவளது கணவன் அவளுடன் நிலத்திற்கு சென்றாலும் அந்த கோவிலில் சென்று அமர்ந்து கொண்டு அங்கு போகிறவங்களை பற்றி புறணி பேசி கொண்டிருப்பான்.

ஒருநாள் மாயா நிலத்தை பண் செய்ய கிளம்பினாள். அவள் கணவன் வீட்டில் இருந்தான். அவள் வீட்டின் வழியாக வந்த வியாபாரி ஒருவன் அவளது கணவனிடம் சாப்பிட ஏதாவது கிடைக்குமா என கேட்டான். அவன் எடுத்து கொடுக்காமல், அவனையே நீ உள்ளே சென்று எடுத்துக்கொள் என்றான். வியாபாரியும் சமையலறையில் இருந்து தேவையானதை எடுத்து உண்டான். ஏதோ அவன் நல்லவன் என்பதால் வீட்டில் இருந்து எந்த பொருளையும் திருடவில்லை. திருடும் அளவுக்கு மாயா வீட்டிலும் பெரிய பொருட்கள் இல்லை. ஆனாலும் அவளது கணவன் படுக்கையில் இருந்து எழாமல் வியாபாரியை உள்ளே அனுமதிப்பது சரியான செயல் அல்ல.

அப்படித்தான் ஒருநாள் மாயா அவளது நிலத்தை தோண்டி விதைப்பதற்காக செம்மை செய்து கொண்டிருந்தாள். அந்த வழியாக வந்த வழிப்போக்கன் ஒருவன் அவளிடம் இந்த நிலத்தை என்னிடம் விற்கிறாயா? ஏன் தனியாக கஷ்டப் படுகிறாய் என்றான். மாயா சிறு புன்னகையுடன் இது என் முன்னோர்கள் எனக்காக கொடுத்தது இதை விற்க எனக்கு விருப்பமில்லை என்றாள்.

வழிப்போக்கன் ஒரு திருடன். அவன் அருகில் இருக்கும் கோவில் சிலையில் இருக்கும் நகைகளை திருடும் எண்ணத்தில் நிலத்தை விலைக்கு கேட்டான்.

அவன் நிலத்திற்கு இரட்டிப்பு விலை தருகிறேன் என்றான். அவன் எண்ணத்தில் நிலத்தில் சுரங்கப்பாதை தயார் செய்து கோவிலில் இருக்கும் நகையை எடுத்து விடலாம் என்று திட்டம் போட்டிருந்தான். ஆனால் இதை அறியாத மாயா நிலத்தை விற்க மாட்டேன் என உறுதியாக சொன்னாள். வழிப்போக்கன் ஐந்து மடங்கு விலை கொடுத்து வாங்குகிறேன், நீ கஷ்டப்பட வேண்டாம். அந்த பணத்தை வைத்து வேலை செய்யாமல் வாழலாம் என்றான். பாழான இந்த நிலத்திற்கு இவ்வளவு விலை கொடுக்கிறானே. இதில் ஏதோ தவறாக இருக்கிறது என மாயா நினைத்தாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனுபவம் என்பது ஒரு புதுமாதிரியான உபாத்தியார். அது பாடங்களைக் கற்றுக் கொடுத்தபின் பரீட்சை வைப்பதில்லை. பரீட்சைகளின் மூலமேதான் பாடங்களை கற்றுத் தருகிறது. – கவியரசு கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெருப்பாற்றை நீந்துகின்ற தரம் 5 பரீட்சை நாளை

நாளை விடியற் பொழுது 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை. தரம் ஐந்து மாணவர்கள் நெருப்பாற்றை நீந்துகின்ற சோதனை நாள்.

புலமைப்பரிசில் பரீட்சை என்ற பேரில் பிஞ்சு உள்ளங்களை வாட்டி வதைத்து எடுத்த நாட்களுக்கு பிரியாவிடை கொடுக்கின்ற நாள்.

ஆம், இலங்கைத் திருநாட்டில் ஐந்தாம் தரத்துக்கு வந்துவிட்டால், அந்தப் பிஞ்சுகள் புலமைப்பரிசில் பரீட்சை என்ற நெருப்பாற்றை நீந்தியே ஆக வேண்டும்.

அந்தக் கண்டத்திலிருந்து எவரும் விலக்குப் பெற முடியாது என்பது தலைவிதியாயிற்று.

பிரபலமான பாடசாலைகளில் அனுமதியை பெறுவதற்காக தரம் ஐந்து மாணவர்களோடு சேர்ந்து அவர்களின் பெற்றோர்களும் விழித் திருந்து படிப்பது விந்தையே.

தவிர, பிள்ளைகளை சதா படி... படி... என்ற நச்சரிப்பு தாங்க முடியாதது.

என்ன செய்வது அவர்கள் பாலகர்கள். இப்பரீட்சை மோசமானது. இது எங்களுக்கு வேண்டாம் என்று எழுந்து நின்று எடுத்துக் கூறுகின்ற தைரியம் இல்லாதவர்கள்.

எனவே அவர்கள் விரும்பினாலென்ன விரும்பாமல் விட்டாலென்ன. புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய அத்தனை உபாதைகளையும் தாங்கியே ஆக வேண்டும் என்பதோடு அந்த விடயத்தை நிறுத்திக் கொள்ளலாம்.

இங்கு நாம் பிரஸ்தாபிக்க முற்பட்ட விடயம்; நாளை 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புலமைப் பரிசில் பரீட்சை எழுதுகின்ற தரம் ஐந்து மாணவர்கள், பரீட்சையை எழுதும் அவர்களுக்கான வளங்களை சரியாகவும் செம்மையாகவும் வழங்க வேண்டும் என்பது தான்.

ஆம், தற்போது நம் பிரதேசத்தில் மாண வர்களிடையே கண்நோய் கடுமையாகத் தொற்றியுள்ளது.

எனவே கண்நோய் பாதிப்புக்குள்ளாகிய மாணவர்களின் விடயத்தில் மேற்பார்வை யாளர்கள் எட்ட நிற்கின்ற செயற்பாடுகள் எதுவும் இருக்காமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

அதேநேரம் இஃது மழைக்காலம் என்ப தால், பரீட்சை மண்டபங்களில் உரிய வெளிச் சம் கிடைப்பதற்கும் மழை ஒழுக்குகள் இல் லாத இடங்களில் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

தவிர, பரீட்சை எழுதுகின்ற மண்டபத்தின் தரையில் இருக்கக்கூடிய ஒழுங்கீனங்கள் பரீட்சை எழுதுகின்ற மாணவர்களுக்கு அசௌ கரியத்தை ஏற்படுத்தலாம். ஆகவே அது விட யத்திலும் கவனம் செலுத்துவது கட்டாயம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பரீட்சை மண்ட பங்களில் நேரத்தை சரியாக காட்டக்கூடிய கடிகாரங்களைப் பொருத்தி வைப்பதும் முக் கியமானது.

இந்த விடயங்கள் ஏலவே செய்யப்படுகின் றனவாயினும் பரீட்சை முடிவுற்ற பின்னர் மேற்போந்த விடயங்களை மாணவர்கள் குறையாக முன்வைப்பதால், அந்தக் குறை கள் இல்லாத நிலையைக் கொண்டுவர வேண் டும் என்ற நல்ல நோக்கில் அவற்றை இவ் விடத்தில் பிரஸ்தாபித்தோம் ஏற்றிடுக.

## மத்திய கிழக்கின் இன்றைய நிலைமை

# வன்னியில் அரங்கேற்றப்பட்ட மனித அவலத்தை நினைவுபடுத்துகிறது- சட்டத்தரணி ஸ்ரீகாந்தா

(யாழ்ப்பாணம்)

மத்தியகிழக்கில் இஸ் ரேலுக்கும் ஹமாஸ் இய க்கத்திற்கும் இடையில் இப்போது தொடர்ந்து நிக ழ்ந்து கொண்டிருக்கும் போரினால் உலக அமை தியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப் பட்டுள்ளது என தமிழ் தேசியக் கட்சியின் தலைவ ரும் மூத்த சட்டத்தரணி யுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

நேற்று ஊடகங்க ளுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் இதனை தெரிவித்தார்.

அதில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

மத்தியகிழக்கில் இஸ் ரேலுக்கும் ஹமாஸ் இய க்கத்திற்கும் இடையில் இப்போது தொடர்ந்து நிக ழ்ந்து கொண்டிருக்கும் போரில், காசா பிரதேசத் தில் வாழும் பலஸ்தீன மக்கள் பெரும் எண் ணிக்கையில் கொல்லப் பட்டும் காயப்படுத்தப் பட்டும் வருகையில் அப் பிரதேசம் தண்ணீர் மற் றும் மின்சாரமின்றி திணறிக் கொண்டிருக் கின்றது.

மிக மோசமான மனி தாபிமான நெருக்கடி ஒன்று, காசாவில் ஏற்பட் டிருக்கும் நிலையில், இஸ்ரேல் நாட்டிலும் பொதுமக்களின் உயிரி ழப்புக்களும் பாதிப்புக்க ளும் உயர்ந்து வருகி ன்றன.

இப்பொழுது நடை பெறுவது இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்திற் கும் பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய ஹமாஸ் இய க்கத்தின் பயங்கரவாதத் திற்கும் இடையிலான போர் என்பதே உண் மையானது.

இஸ்ரேலுக்குள் ஊடு ருவித் தாக்கிய ஹமா ஸின் போர் நடவடிக் கையை சாட்டாகவைத்து, அதன் கட்டுப்பாட்டில் உள்ள காசா பிரதேசத் தையே தரைமட்டமாக்கி, இரு துண்டுகளாக அமை ந்திருக்கும் பலஸ்தீன மண்ணின் ஒரு துண் டினை ஒட்டுமொத்தமாக விழுங்கிவிடும் இலக்கு டன் செயற்பட்டுக் கொண் டிருக்கும் இஸ்ரேலுக்கு அமெரிக்காவும் மற்றும் மேற்குலக நாடுகள் பல வும் உதவிக் கொண்டிரு க்கும் நிலைமையில் உலக அமைதியின் எதிர் காலமே கேள்விக்கு உட் படுத்தப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கின் இன்றைய நிலைமை, 14 வருடங்களுக்கு முன் னர், எமது இலங்கைத் தீவில், வன்னிப் பிர தேசத்தில் அரங்கேற்றப் பட்ட மனித அவலத் தையே ஞாபகப்படுத்து கின்றது.

அரசியல் நீதி கோரி நிற்கும் இலங்கைத் தமிழ் மக்கள் தம்மைப்போலவே, ஏகாதிபத்திய சக்திகளால் வஞ்சிக்கப்பட்ட பலஸ்தீன மக்களோடு உணர்வுக ளால் ஒன்றி நிற்கின்ற னர் என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண் டிய நேரம் இதுவாகும்.

இது தமிழ்த் தேசிய அமைப்புக்கள் அனைத் தினதும் கட்டாயக் கட மையும் கூட என அவர் தெரிவித்தார். (நி-5-33-104)

## இலங்கை வர

# ஐந்து நாடுகளுக்கு விசா கட்டணமில்லை

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

5 நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற் றுலா பயணிகளிடம் விசா கட்டணத்தை அறவிட வேண்டாம் என்ற யோச னைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது.

அந்தவகையில், சீனா, ரஷ்யா, இந்தியா, தாய் லாந்து மற்றும் இந்தோ னேசியா ஆகிய நாடுக ளுக்கே இவ்வாறு விசா கட்டணம் விலக்களிக் கப்படவுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (நி-5)

# விளக்கமறியல் நீடிப்பு

(கரணவாய்)

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக தாயகம் திரும்பிய மூவரையும் மேலும் 14 நாட்கள் விள க்கமறியல் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதி வான் அலெக்ஸ் ராஜா உத்தரவிட்டுள்ளார்.

குடத்தனை வடக் கைச் சேர்ந்த தாயும் இரு பிள்ளைகளும் யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு சென்றிருந்தனர். அங்கு வாழ முடியாத சூழ்நிலை யில் படகு மூலம் சட்ட விரோதமாக தாயகம் திரும்பி குடத்தனையில் தங்கியிருந்த சமயம் கட ந்த 10 ஆம் திகதி பருத் தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விள க்கமறியலில் வைக்கப்ப ட்டிருந்தனர்.

மீண்டும்வழக்குநேற்று எடுக்கப்பட்ட போது மூவ ரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தர விட்டுள்ளார். (நி-5-6-60)

# இலங்கை-இந்தியா இடையேயான மின் இணைப்புத் திட்டம் மீளாய்வு

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையே யான முன்மொழியப்பட்ட மின்சாரம் கடத்தும் பாதையின் இணைப்புப் புள்ளிகளாக இலங்கை யின் வடமேற்குப் பகுதி யில் உள்ள மன்னார் மற் றும் தென்னிந்தியாவில் உள்ள மதுரை ஆகிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் மின் துறை செயலாளர்கள் தலைமையிலான செயற் குழுவின் பரிசீலனைக்கு பின்னர் உருவாக்கப்பட்டு ள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இரு நாடுகளுக்கிடை யேயான மின் இணை ப்புத் திட்டமானது 2003 ஆம் ஆண்டளவில் முன் மொழியப்பட்டு நீண்ட நாள் உறக்கத்தின் பின் னர் இப்போது மீண்டும் தூசு தட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந் தியாவுக்கான அண்மை க்கால விஜயத்தின் விளைவாக இந்த திட்டம் மீள திட்டமிடப்பட்டுள் ளதாக கூறப்படுகிறது.

அடையாளம் காண ப்பட்ட இந்த இணைப்பு புள்ளிகள் மாற்றப்படா விட்டால், முன்மொழியப் பட்ட மின் பாதையின் மொத்த தூரம் சுமார் 280 - 300 கிலோ மீற் றர்களாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த திட் டத்தை நிறைவேற்று வதில் இலங்கை தரப்பு கடலுக்கு அடியில் மற்றும் மேல்நிலை கம்பிகள் ஆகியவற்றில் மின் வட ங்களை பயன்படுத்துவ தற்கு முன்மொழிவு களை சமர்ப்பித்துள்ளது.

இந்த முன்மொழிவு களின் படி முதற்கட்ட மதி ப்பீடாக 400 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் செலவாகும் என கூறப்படுகிறது. கடலுக் கடியில் மின்வடங்க ளைப் பயன்படுத்தினால் இந்த செலவு இன்னமும் அதிகரிக்க வாய்ப்புள்ள தாக தெரிவிக்கப்படுகி றது. (நி-5)

# இஸ்ரேலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இஸ்ரேல் மற்றும் பால ஸ்தீனத்திற்கு இடையில் இடம்பெற்று வரும் போரு க்கு எதிர்ப்பு தெரிவித்தும், பாலஸ்தீன மக்களுக்கு ஆத ரவு தெரிவித்தும், கொழும் பில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று தெவட்டகா பள் ளிவாசலுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டுள் ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ் மான் உள்ளிட்ட பலர் கல ந்து கொண்டனர். (நி-5-6)

# கரப்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறை வையொட்டி அமரர் சிவ குருநாதன் ஞாபகார்த் தமாக நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அணிகளை கொண்ட கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கி ழமை இரவு 7.30 மணி க்கு மின்னொளியில் இள வாலை மெய்கண்டான் பாடசாலை அருகே உள்ள வாலிபத்திடலில் இடம்பெற வுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

11

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



1798 இல் ஸ்ரீஇராஜாதி இராஜ சிங்கன் காலமானதும் அவனுடைய சகோதரன் கண்ணுச்சாமி (கந்தசாமி) என்பான் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் ஆட்சியை ஏற்றான். நாயக்கவம்ச உரிமைப்படி முத்துச்சாமி என்ற இளவரசனுக்கு ஆட்சியுரிமை போக வேண்டும். ஆனால் கண்டியின் மகா அதிகாரமாக விளங்கிய பிலிமத்தலாவை என்பான் தன் எண்ணப்படி அரசன் நடப்பான் என்பதால் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனை மன்னனாக்கினான்.

### ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் (1798-1815)

ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் இலங்கையின் கண்டி அரசை ஆண்ட கடைசி மன்னன் ஆவார். முன்னைய அரசன் ஸ்ரீராஜாதிராஜ சிங்கன் பிள்ளைகள் இன்றி இறந்த போது இவர் சிம்மாசனம் ஏறினார். கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு 1803, 1809 ஆண்டுகளில் பிரித்தானிய எதிர்ப்புக்கள் இன்றிக் கண்டிக்குள் நுழைந்தனர். எனினும் அரசுப்படைகள் பிரித்தானியப் படைகளைப் போரிட்டு வெற்றி பெற்றார். பல்வேறு சதித் திட்டங்களால் இறுதியாக போரில் வீழ்த்தப்பட்டார். இறுதியாகக் கண்டிப் போரில் 1815 இல் பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்ட இவர் சிறைப்பிடிக்கப்பட்டார். இவர் மதுரை நாயக்கர் வம்சத்தில் தோன்றிய ஒரு இளவரசன் ஆவார். இவர் முதலில் கண்டி நாட்டை ஆண்ட ஸ்ரீராஜாதி ராஜசிங்கனின் மருமகன் ஆவார்.

இவரது ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிய பிரித்தானியர், கண்டி அரசில் தலையிடவில்லை. ஆனால், பிலிமத்தலாவ என்பவர் பிரித்தானியருடன் மறைமுகத் தொடர்புகளை வைத்துக் கொண்டு கண்டியரசனைப் பிரித்தானியருக்கு எதிராகத் தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். இதனால் பிரித்தானியர் கண்டியரசைக் கைப்பற்றுவதற்கான காரணம் கிடைக்கும் என அவன் கருதினான்.

கரையோர மாகாணங்களில் உறுதியான நிலையில் இருந்த பிரித்தானியருடன் போரில் ஈடுபடும்படி பிலிமத்தலாவ, ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனைத் துண்டிவிட்டான். 1803 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி போர் அறிவிக்கப்பட்டது. பிரித்தானியர் எதிர்ப்புக்கள் இன்றிக் கண்டிக்குள் நுழைந்தனர். எனினும், அரசுப்படைகள் பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்துக் கண்டியரசனை மீண்டும் பதவியில் அமர்த்தினர். பிலிமத்தலாவ இரண்டு முறை அரசனுக்கு எதிராகச் சதி செய்து நாட்டைக் கவர முயன்றது கண்டுபிடிக்கப்பட்டாலும் அவன் மன்னிக்கப்பட்டான். மூன்றாவது தடவையும் அவன் பிடிபட்ட போது அவன் கொல்லப்பட்டான்.

பிலிமத்தலாவுக்குப் பதிலாக அவனது மருமகனான எகலப்பொலை அதிகாரியாக நியமிக்கப்பட்டான். அவனும் தனது மாமனைப் போலவே அரசனுக்கு எதிராகச் செயற்பட்டுக் குழப்பங்களைத் தூண்டி விட்டான். இக்குழப்பங்கள் அடக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து எகலப்பொலை தப்பி கொழும்புக்கு ஓடிப் பிரித்தானியருடன் சேர்ந்து கொண்டான்.

பிரித்தானியர் மீண்டும் 1815



சிறீ விக்ரம ராஜசிங்கன் மற்றும் அவரது மனைவி ஆகியோரின் கல்லறைகள், வேலூர்

பெப்ரவரி 10 ஆம் திகதி கண்டியை கைப்பற்றினர். மார்ச் 2 ஆம் திகதி என்னும் கண்டி ஒப்பந்தத்தின் மூலம் கண்டி அரசு பிரித்தானியர்களால் பறிக்கப்பட்டது. அரசர் ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கன் தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டார். அங்கே பிரித்தானியரால் சிறை வைக்கப்பட்டார். 1832 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் தனது 52 ஆவது வயதில் காலமானார்.

### கண்டிய காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள்

கொக்கு ரிடி என்றும் அழைக்கப்




படும் லாரின், கண்டியில் 17 முதல் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை பயன்பாட்டில் இருந்தது. தனியார் தரப்பினரால் தயாரிக்கப்பட்டது. இந்தக் காசுகள், மீன் கொக்கி போன்ற வடிவத்தைக் கொண்டவை

### யாழ்ப்பாண இராச்சியம்

கிறிஸ்துக்கு ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன்னே ஒரு தமிழ் இராச்சியம் மிக்க பிரசித்தி பெற்று விளங்கியதாகவும் அந்த இராச்சியத்தின் உற்பத்தியைப் பற்றியோ அங்கு ஆட்சி செலுத்திய இராஜ பரம்பரையைப் பற்றியோ தொடர்ச்சியாகக் கூறும் நூல்கள் எதுவுமில்லை. மகாவம்சம், சூளவம்சம் முதலிய நூல்களை இயற்றிய சிங்கள நூலாசிரியர்கள், தமிழரசர்கள் பற்றியோ அல்லது அவர்களுடைய அரசாட்சி பற்றியோ விபரமாய் ஒன்றும் அந்நூல்களில் சொல்லவில்லை. தமிழர், சிங்களவர்களுக்கு அக்காலத்தில் மிக்க விரோதிகளாயிருந்து, சிங்களவரின் இராச்சியத்தின் மீது படையெடுத்து வந்து ஜனங்களுக்கும் அவர்களுடைய பொருட்களுக்கும் பெருங் கெடுதி விளைவித்தனரென்று அவ் வரலாறு நூல்கள் கூறுகின்றன. ஆகையால் இலங்கைச் சரித்திரத்தை எழுதிய சிங்கள நூலாசிரியர்கள், தமிழருடைய குற்றங்களை எடுத்துக் கூறினார்களே தவிர, குணங்களைக் கூறவில்லை.

யாழ்ப்பாண வரலாற்று மூல நூல்களில் ஒன்றான வையாபாடல் இவ்வரசின் ஆரம்பத்தைக் கி.மு. 101 என்று கூறுகிறது. இன்னொரு நூலான வைபவமாலை இவ்வரசு கி.பி. 1314 இல் தொடங்கியதாகச் சொல்கிறது. எனினும் பல ஆய்வாளர்கள் யாழ்ப்பாண அரசு கி.பி. 13 ஆம், 14 ஆம் நூற்றாண்டை அண்டிய காலப்பகுதிகளிலேயே தொடங்கியிருக்கக் கூடும் எனக் கருதுகிறார்கள். 11ஆம் நூற்றாண்டில் இராஜேந்திரசோழனின் இலங்கைப் படையெடுப்பு, 13 ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகனின் படையெடுப்பு என்பன யாழ்ப்பாண அரசு உருவாவதற்கான களம் அமைத்துக் கொடுத்தன. ஆயினும், அதன் தோற்றம் பற்றிய வாத, எதிர்வாதங்கள் தொடர்ந்தும் நிலவியே வருகின்றன.

யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றி தெளிவற்ற கருத்துக்களும் வரலாற்று ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகளும் காணப்படுகின்றன. குறிப்பிடத்தக்க பிரதான வரலாற்று ஆய்வாளர்கள் பரவலாக ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு யாழ்ப்பாணத்தில் 1215 இல் இந்தியாவின் கலிங்க நாட்டைச் சேர்ந்த தளபதி கலிங்கமாகன் படையெடுப்பு பின் ஆரம்பமாகியது என்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

### யாழ்ப்பாண வைபவமாலை

யாழ்ப்பாண வைபவமாலை என்பது யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கூறவென எழுந்த ஒரு நூலாகும். 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் என்பவரால், கி.பி 1736 ஆம் ஆண்டளவில் அக்காலத்திலிருந்த ஒல்லாந்த அதிகாரியொருவரென நம்பப்படும் மேக்கறூன் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க இது எழுதப்பட்டதாக, இந்நூலிலுள்ள சிறப்புப்பாயிரச் செய்யுளொன்றினால் அறியப்படுகிறது.

கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா மற்றும் இராசமுறை போன்ற நூல்களை முதல் நூல்களாகக் கொண்டே வைபவமாலையை இயற்றினாரென்று மேற்படி செய்யுளில் புலவர் எடுத்துக் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தையாண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் கால வரலாறு பற்றிக் கூடிய அளவு தகவல்களைக் கொண்டுள்ள தற்போது கிடைக்கக் கூடிய நூல் இதுவேயாகும். எனினும் மேற்படி காலப்பகுதியின் இறுதியின் பின் 150 தொடக்கம் 200 ஆண்டுகள் வரை கழிந்த பின்னரே இந்நூல் எழுதப்பட்ட காரணத்தால், பல்வேறு நிகழ்வுகளின் காலங்கள் தொடர்பிலும் மேலும் பல விடயங்களிலும் பிழைகளும் குழப்பங்களும் நேர்ந்துள்ளதாகச் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். எனினும் யாழ்ப்பாண வரலாறு தொடர்பில் இந்நூலின் பெறுமதியைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

இந்நூல் ஆரம்பத்தில் இராமாயணத்திலிருந்து, இராம இராவண யுத்தத்தின் பின் ஏற்பட்ட விபீஷணன் ஆட்சியைத் தொட்டுப் பின் மகாவம்சத்திலிருந்து, வட இந்தியாவிலிருந்து வந்த விஜயராஜனின் கதையையும் அவன் பின் அரியணையேறிய அவன் தம்பியின் மகனாகிய பண்டுவாசனதும் கதை கூறிப் பின் அவன் வம்சத்தில் வந்த ஒருவனிடமிருந்து தென்னிந்தியப் பாணன் ஒருவன் பரிசாகப் பெற்ற மணற்றிடர் என்ற இடம் யாழ்ப்பாணமான கதை கூறி யாழ்ப்பாணத்தின் வரலாற்றைத் தொடங்குகிறது. இலங்கையின் மேற்குக் கரையிலுள்ள திருக்கேதீஸ்வரத்தின் புனரமைப்பு, கிழக்குக் கரையிலுள்ள திருக்கோணேஸ்வரம், தெற்கிலுள்ள சந்திரசேகரன் கோயில் மற்றும் வடகரையிலுள்ள திருத்தம்பலேஸ்வரம் என்பவற்றை விஜயராஜனின் திருப்பணிகளாக இந்நூல் கூறுகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

இதில் கோணாவில் யூனியன் குளத்தைச் சேர்ந்த இலங்கேஸ்வரன் இசையமுதன் (வயது-17) என்பவரே உயிரிழந்தவராவார்.

உழவு இயந்திரம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதிலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தின்போது மோட் டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,316)

## ரயிலில் ஏற...

ழுந்துள்ளார்.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த மாணிக்கம் விஜயரட்ணம் (வயது-69) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 8ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் தச்சன்தோப்பு புகையிரத நிலையத்தில் புகையிரதத்தில் ஏறியபோது தவறி தண்டவாளத்தில் வீழ்ந்துள்ளார்.

உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## குப்பைக்கு...

பரவல் ஏற்பட்டு எரிகாயங்களுக்குட்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் சங்கத்தானை சாவகச்சேரியைச்சேர்ந்த சுகந்தன் தயாபரி (வயது-37) என்ற நான்கு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் கடந்த 7ஆம் திகதி பிற்பகல் 5.00 மணியளவில் வீட்டில் குப்பை கொளுத்தியுள்ளார்.

மண்ணெண்ணெய் ஊற்றி குப்பை கொளுத்தியபோது காற்றோட்டத்தில் நின்று தீ வைத்ததால் உடையில் தீ பற்றியுள்ளது.

எரிகாயத்துக்குள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## கேரள கஞ்சா...

நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட பொலிஸ் விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## துன்னாலையில்...

இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை சுஜீதரன் (வயது- 31) என்ற இளைஞரே வாள்வெட்டு காயங்களிற்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

## காங்கேசன்துறை...

இன்று காங்கேசன்துறையை வந்தடையவுள்ளது.

மணித்தியாலத்திற்கு 36 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடிய இந்த பயணிகள் கப்பல், 60 கடல் மைல் தூரத்தை 3 மணித்தியாலங்களில் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

14 ஊழியர்கள், 150 பயணிகளுடன் பயணிக்கும் வசதிகளைக் கொண்ட இந்த குளிரூட்டப்பட்ட கப்பலில், பயணிகளுக்கு தேவையான சிற்றுண்டி, தேநீர், குளிர்பானங்களை கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 11.30 மணிக்கு காங்கேசன் துறை துறைமுகத்தை செரியாபாணி கப்பல் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு நாகபட்டினத்திற்கான பயணத்தை ஆரம்பிக்கவுள்ள செரியாபாணி கப்பல், மாலை 5 மணிக்கு துறைமுகத்தை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பலை வரவேற்கும் நிகழ்வில் துறைமுகங்கள், கப்பற்துறை, சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் கலந்து கொள்ளவுள்ளார்.

கேரளாவின் கொச்சினில் 25 கோடி இந்திய ரூபாய் செலவில் செரியாபாணி கப்பல் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாகபட்டினத்திலிருந்து காங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் போக்கு வரத்து சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அறிவித்திருந்தார்.

இறுதியாக 1984ஆம் ஆண்டு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் கப்பல் சேவை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

40 வருடங்களின் பின்னர் நாகபட்டினத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையே இந்த கப்பல் சேவை மீள ஆரம்பிக்கப்படுகிறது. (ம-7)

## புலமைப்பரிசில்...

நிலவும் சீரற்ற காலநிலையை கருத்திற் கொண்டே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே, அவர் இதனை தெரிவித்தார். (ம-7)

நாகபூசணி அருளின் அதிர்ஷ்ட அலை
மீண்டும் அபிவிருத்தி லொத்தர் சபையின் அதகோடிபதி லொத்தர் சீட்டு மூலம் 13.10.2023 அன்று
ரூபா 20 இலட்சம் வெல்லப்பட்டுள்ளது.
யாழ். விற்பனை முகவர் கனகலிங்கம் திலகவதி
இவ் அதிர்ஷ்ட அலையுடன் நீங்களும் இணைந்து கொண்டு தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபையின் ரிக்கெற்றுக்களை யாழ்.முகவர்கள் கனகலிங்கம் திலகவதியினது ரிக்கெற்றுக்கள் என கேட்டு வாங்குங்கள்.
அடுத்த வெற்றியாளர் நீங்களா?
யாழ்.முகவர்கள் - கனகலிங்கம் திலகவதி
இல.4. K.K.S வீதி, யாழ்ப்பாணம். (17453)

மஹஜன சம்பத — திகதி 2023/10/13 — சீட்டிழுப்பு இலக்கம் 5266 — 0 2 7 3 9 3 3 — தேசிய லொத்தர் சபை
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3508 — சீட்டிழுப்பு திகதி 13.10.2023 — S 12 22 34 79 — S 57766 — தேசிய லொத்தர் சபை
லக்கி 7 — திகதி 13.10.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0092 — L7 இலக்கம் 0 3 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 7 7 9 1 4 4
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.10.13 — சீட்டிழுப்பு இலக்கம் 575 — மகரம் 06 10 37 40 மகரம்
தன நிதானய — திகதி - 2023.10.13 — சீட்டிழுப்பு இலக்கம் - 1296 — F 34 52 60 66 F — Double Chance 45101
மெகா பவர் — திகதி 13/10/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1614 — F 11 26 39 53 60 — Double Chance 01500
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2240 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.10.13 — தினம் வெள்ளிக்கிழமை — 07 17 60 73 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,389,744.00 — DLB
சனிதா — திகதி 2023.10.13 — வெற்றி வாரம் 4401 — வர்ணம் செம்மஞ்சள் — 14 50 60 71 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,504,452.00 — 1 8 3 0 7 — DLB
சசிரி — வெற்றி வாரம் 388 — 2023.10.13 — பச்சை — 02 04 48 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,343,240/- — DLB
சீட்டிழுப்பு வாரம் 3952 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.10.13 — தினம் வெள்ளிக்கிழமை — 01 02 10 36 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,154,928/- — 189271 — 289 — DLB
13.10.2023 — வெற்றி வாரம் 1416 — K 32 07 28 53 65 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 451,616,934.20 — 789010 — 733 — DLB — 011-2 333 546-47 — Web : www.dlb.lk
அத கோட்டிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் : 2066 — சீட்டிழுப்பு திகதி : 2023.10.13 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,422,352/- — 11 42 51 74 M — 472136 — DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.7 விலைக்கழிவில் யாழில் பெற்றோல்




ஒரு லீற்றர் பெற்றோல் ரூ. 7 விலைக் கழிவிலும், ஒரு லீற்றர் டீசல் ரூ. 3 விலைக்கழிவிலும் தாம் விற்பனை செய்வதாக பெற்றோல் நிலைய உரிமையாளர் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சீன நிறுவனமான சினோபெக் (sinopec) நிறுவனத்தின் எரிபொருளே இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாக விளம்பரப்படுத்தியுள்ளனர்.

இதேபோல் கொக்குவில், சுன்னாகம், நாவற்குழி பகுதிகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. (ம-7.33)

## பயங்கர...

குறித்த இரண்டு உத்தேச சட்டமூலங்கள் ஊடாகவும் அதிகாரிகளுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த சட்டமூலங்கள் சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு ஏற்புடையவையாக இல்லை எனவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடகப்பேச்சாளர் Ravina Shamdasani தெரிவித்துள்ளார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், நிகழ்நிலை காப்பு சட்டமூலங்கள் கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமைகளை மட்டுப்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் தொடர்பான வரையறை நீதித்துறையின் போதிய மேற்பார்வையின்றி தனி நபர்களை விசாரணை செய்வதற்கும் காண்காணிப்பதற்கும் தடுத்து வைப்பதற்கும் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் பரந்த அதிகாரங்களை வழங்குவதாக மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## வங்க...

என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த காற்றுச் சுழற்சி இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு அண்மித்திருப்பதால் அடுத்த சில நாட்களுக்கு வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் மேக மூட்டத்துடன் காணப்படும் என்பதோடு அடுத்த சில நாட்களுக்கு பரவலாக மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. (ம-7)

## வட...

இடம்பெற்றது. இதன்போது ஹர்த்தால் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை, கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களை சந்திப்பது, இந்திய பிரதமருக்கான கடிதம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.(ம)

அமெரிக்க லொத்தர் விசா
2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
★5000 இற்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்படுவர்.
★அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna.
077 755 4528
(17439)

CANADA VISA
Canada, UK, France, Australia மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584
(17439)

ARA MULTY Traders
Online Courier Delivery
சர்வதேச சிக்கன பொதிகள் பரிமாற்று சேவை



No. 119,
Nedunkulam Road,
Ariyalai, Jaffna.
(17440)
074 038 3290

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.
(17439)

அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226244
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 07-11-2023
(C-7426)
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம்-1 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699832 | கொழும்பு 0777469777 | திருகோணமலை 0768226237 | சாவகச்சேரி 0768226242 |
| யாழ்ப்பாணம்-2 0768226243 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | [illegible] 0776697960 | [illegible] 0764550675 |
| [illegible] 0768226238 | [illegible] 0764550671 | [illegible] 0777718322 | [illegible] 0777726322 | [illegible] 0743900353 | [illegible] 0777720322 |
| [illegible] 0764550674 | V2 Travels | | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | |

விற்பனை உதவியாளர் தேவை (பெண்கள்)
நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் பெண்கள் வேலைக்குத் தேவை.
Note : யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
(17452)
076 166 1986

அலுவலக வேலை - பயிற்சி
2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
(C-7426)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777



மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு
இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட JAI தச்சு வேலை மெசின்கள் ( JAI Wood Working Machines). எம்மிடம் உத்தரவாதத்துடன் நியாயமான விலையில். உதறல்கள் (Vibration) அற்றவை. கடின உழைப்பிற்கு உகந்தவை. 13" இல் இருந்து 18" வரையான மடிக்கக் கூடியவை. சகல பொருத்துகளுடன்.
(17444)



ஆர்க் என்ரபிறைசஸ்
102, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571
Hotline: 071 535 7799 / 071 973 9917

A/L ICT வகுப்புக்கள் திரு.இ.குமரன்
A/L 2025: Computer System, Boolean Algebra, அடுத்தது Computer Networks, Operating System
A/L 2023 Paper
A/L 2024: Database Systems, அடுத்தது Python Programming, Paper Class
Computer Lab, Study Guide, Unit Exam, Past Papers
வடக்கில் ICT பாடத்தில் அதிக A சித்தி பெறும் ஒரே நிறுவனம்
ICT துறையில் 20 வருட கற்பித்தல் அனுபவம்
100% Practical-Oriented Class
MIS ICT COLLEGE (17397) TP:0776577359 #74, Sabapathy Lane, Jaffna.

Happy Supermarket - உரும்பிராய்
உங்கள் இல்லங்களிற்கு தேவையான் அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 265/= | (max2Kg) |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 290/= | (max 2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 439/= | (max 2Kg) |
| 1 Kg கோதுமை மா | - 180/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 180/= | (max5Kg) |
| 1 Kg றவை | - 288/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1030/= | ~~(1080/=)~~ |
| 400 g அன்லீன் பால்மா | - 1250/= | ~~(1350/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 262/= | ~~(330/=)~~ |
| 70g Baby Soap | - 108/= | ~~(145/=)~~ |
| 300g நெஸ்டமோல்ட் | - 570/= | ~~(620/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |

1030/= Anchor ~~1080/-~~
(17451)
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
Happy Supermarket 0777 8080 30

## ஒளிசெய் மானுடம்

இராசேந்திரம் நிக்சன்


நினைவலைகள்

14.10.2023

மு.ப. 11.30

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்

அன்னாரின் அஞ்சலி நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் - குடும்பத்தினர்



இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org